மருத்துவர் மன்றம்

திங்கள் வெளியீடு

நாடகத்திலகம் மருத்துவர் S. S. விஸ்வநாததாஸ் அவர்கள்

அண்டி பிழைக்க வந்த இனம்
யாரோ வெள்ளை கொள்ளை இனம்
நம் உறிமையை பறித்து சடமாக்கி
நம்மை உருவில் மனித இனமாக்கி.

மதுவில் விழுந்த ஈயாகி
மங்கையின் கையில் செண்டாகி,
உணர்ச்சி யிழந்த உடலாகி
உறிமை இழந்து மரமாகி. 2

கல்வி கேள்வி யில்லாது
காற்றின் பக்கம் வாழ்ந்த நம்மை
கொக் கென்ருய் வெண்மை என்ருய்
கொந்தள மூக்கு உடைய தென்ருய். 3

நாடகத்தில் படைஉரு வாகி
நாவசைப்பே வெடிமருந் தாகி
ஆட்சி பொருப்பு நையந்த போது
அறிந்து கொண்டனர் வெள்ளையர்கள்.

கொக்கு பாட்டை இசைத்தவுடன்
கொடிய விலங்கை கண்டவுடன்
களங்க மின்றி கைநீட்டி - வீரக்
கழலே என்று யேற்றிடுவாய். 5

இறந்தும் இறவா தொண்டனும்நீ
இந்நாட்டில் மலர்ந்த தேசியம்நீ
மலர்ந்து வாடி விழுவதுபோல்
நாடு மருத்துவன் எனவே, மறந்ததுவே.

டிசம்பர், ஜனவரிமீ [முகில்வண்ணன்] விலை 25 காசு

துரிதமான,
மழமழப்புள்ள
கூவரங்களுக்கு...



அதிக லாவண்டர் நறுமணத்துடன்
கூடிய இந்த ஷேவிங் ரவுண்ட்,
அழகிய தந்த நிறமும் நீல நிறமும்
உள்ள பிளாஸ்டிக் டப்பாவில் நன்முக
அடக்கம் செய்யப்பட்டிருக்கிறது.
நீடித்து நிற்கக் கூடிய வழவழப்பான
நுரையைக் கொடுக்கும் கோத்ரெஜ்
ஷேவிங் ரவுண்ட், மற்ற ஷேவிங்
ரவுண்ட்களின் விலையை விட
மிகவும் குறைவு!

இலவசம்
ஒவ்வொரு கோத்ரெஜ்
ஷேவிங் ரவுண்ட் பிளாஸ்டிக்
டப்பாவோடும் ஒரு அப்போலோ
பிளேடு இலவசம்

கோத்ரெஜ்
நேர்த்தியான சோப்புக்களே தயாரிக்கிறார்கள்
டாய்லட், வாஷிங் மற்றும் ஷேவிங் சோப்புகளும் கூட!

பொருளடக்கம்

		பக்கம்
1.	யாருக்கு உங்கள் வாக்கு	... 1
2.	வான் சிறப்பு (மறையின் மேன்மை) ...	... 5
3.	சுகாதாரமும் சுகவாழ்வும் (அனுபவ மருத்துவம்)	... 7
4.	பொங்கல் நாளில் புதிய உணர்ச்சி (முகில்வண்ணன்)	... 9
5.	அகத்தி (சித்தன்)	... 12
6.	குழந்தை பிணியும் நிவர்த்தியும் (ஆறுமுகநாதன் S.M.P.)	... 14
7.	மாசிடோனியா தேசத்துப் பழமொழிகள் (அன்பு பழம்நீ)	... 18
8.	ருஷியாவில் மூன்றுண்டுகள் கருங்கடல் (S. N. சொக்கலிங்கம், M.A.)	... 20
9.	அழகும் அறிவும் (என். எஸ். இராமன்) சிறுகதை	... 23
10.	கீல்வாத ரோகங்களும்—சிகிச்சை முறைகளும் (Dr. A. E. ஷண்முகம்)	... 28
11.	திரு. டொமினிக் ஜீவா பாராட்டுக்கூட்டம்	... 32
12.	சரித்திரத்தில் கதா நாயகர்கள் (கஜினி) ...	... 37
13.	வரழ்க கொடுமை (M. இராஜகோபால்) ...	... 39
14.	மருத்துவர்களே நீங்கள் சிந்திப்பதுண்டா ...	... 42
15.	நூருண்டு வாழ்க்கை இரகசியம் (முகில்வண்ணன்)	... 46
16.	கலித்தொகையில் நகைச்சுவை (எஸ். என். சொக்கலிங்கம் M.A)	... 47

முப்பது ஆண்டுகள் மிஷின் சாணை பிடிப்பதில்
அனுபவம் வாய்ந்த

M. யூசப்

முடிதிருத்தும் கருவிகள் விற்பனையாளர்

குறைந்த விலை! – தரம் நிறைந்த கருவிகள்!! இங்கு இந்தியா, அமெரிக்கா, லண்டன், பிரான்ஸ், ஜப்பான் முதலிய நாடுகளில் செய்யப்பட்ட முதல்தரமான மிஷின், கத்தி, கத்தரி, சீப்பு, தீட்டுகல், சேவிங் பிரஷ், பன்னீர் பம்பு, நருமணமிகுந்த பவுடர், சுனே, ஹேர் கிரீம், வாஸ்லின் முதலிய முடியலங்கார நிலையங்களுக்கு வேண்டிய எல்லாப் பொருள்களும் குறைந்த லாபத்திற்கே விற்கப்படுகிறது. முடி அலங்கார நவீன கருவிகள் வேண்டுவோர்களுக்கு ஆர்டர்மீது குறிப்பிட்ட நாட்களில் வரவழைத்துத் தரப்படும். விவரங்களுக்கு நேரில் ஒருமுறை வந்து பாருங்கள்.

M. யூசப்
நெ. 30, அகூடின் தெரு, சென்னை-5.

மருத்துவர் மன்றம்

திங்கள் வெளியீடு

ஆசிரியர் : M. A. இராமகிருஷ்ணன்

அணுவு ளவனு மவனு ளணுவுங்
கணுவர நின்ற கலப்ப துணரா
நிணரிலி யீசனவ னெங்குமாகித்
தணிவர நின்றுன் சராசரந் தானே.

மலர் 1 | பிலவஞ்ஞ தைமீ–டிசம்பர். ஜனவரிமீ 1962 | இதழ் 5, 6

யாருக்கு உங்கள் வாக்கு

தமிழர்களின் எதிர்கால வாழ்க்கையில் ஒளிதரும் லட்சியங்களை நடமுறையில் கொண்டுவரும் நிர்வாகிகளை நாமே தேர்ந்தெடுக்கும் பொன்னை நாள் நெருங்கி வருகிறது. ஜனநாயக அடிப்படையில் நமது வாழ்க்கையில் நாம் அடையப் போகும் இன்பதுன்பங்களை நல்ல தொரு திட்டம் தீட்டி அதனுல் விளையும் நற்பயன்களை அனுபவிக்க நமது உயிரின் உரிமைகளை வரப்போகும் நிர்வாகிகளிடம் ஒப்படைக்கப் போகிறோம் என்பதை பொதுமக்கள் மறந்துவிடக்கூடாது. அந்த உரிமைஎன்ற உயிர்ச்சின்னத்தின் பெயரே ஓட்டு. மனிதஉடலை வளர்க்கவும் உயிரைக்காக்கவும். உலகை நிர்மாணிக்கவும் பிரதானமானது வாய்மை என்பதை நாம் மறுக்க முடியாது எதைக் காக்காவிடினும் மனிதன் நாவைக் காக்கவேண்டும் என்று மறத்தமிழன் உலகம்ஒப்பக் கூறியதை மறுக்கமுடியுமா? அந்த ஒப்பற்ற வாக்கு அட்சயபாத்திரத்தை; விலைகூறுவோரும்—விலைக்கு வாங்குவோரும் மலிந்து விட்டனர் என்பதைக் காணும்போது மனிதன் தனது மனிதத் தன்மையிலிருந்து மாறிவிட்டான் என்பதில் சந்தேகமில்லை இந்த இழி நிலை வளர்க்கப்பட்டால் நேர்மையில் வளர்ந்த தமிழனின் மாண்பு மங்கி மறைந்து மண்ணோடு மண்ணாகிவிடும் என்பதை நினைக்கும்போது

இத்தகைய மனித சமுதாயத்திலே வாழ்வதைவிட மனிதப் பண்பை யுடைய எவருக்கும் புலிவாழும் கானகம்மேல் அல்லவா?

உயிரினும் கடமையே பெரிதாக எண்ணும் தமிழினம் தனது பரம்பரைப் பண்பைக் காப்பாற்ற விழித்துக்கொள்ள வேண்டும். வயிற்றுச் சோற்றுக்கு உயிரை விற்று அடிமை யாவதைவிட பட்டினியால் இறப்பதே மேல். தன்மானமுள்ள தமிழன் ஐம்பது காசுக்கோ—ஐந்து ரூபாய்க்கோ அல்லது ஐம்பது ரூபாய்க்கோ ஆசைப்பட்டு உயிரை விலைக்கு விற் பதை அடிமை புத்தியின் தடிப்புத்தனம் மாறவில்லை யென்று தான் நினைக்க வேண்டி இருக்கும். இந்தத் தேர்தலில் அந்த அசுத்தமான இரத்தக்கறை தமிழ்மக்கள் உள்ளத்தில் படியாது; படியக் கூடாது என்பதே எமது வேண்டுகோள். அப்படியானால் யாருக்கு வோட்டு போடவேண்டும் என்பதை நாம் தெரிந்து கொள்ளவேண்டும். நாட்டிலே பல கட்சி கள் பொதுநலம் என்ற போர்வையிலே சுயநலக் கட்சிகளும் தகுதி இல்லாத கட்சிகளும் காலத்திற்கொவ்வாத திட்டங்களை வாயளவில் பேசி உருட்டி மிரட்டி பயமுறுத்தும் கட்சிகளும் தனக்கு இரண்டு கண்ணும் போனாலும் எதிரிக்கு ஒரு கண் ணாவது போகட்டும் என்ற கட்சிகளும் அடிக்கடி பேச்சை கொள்கைகளை மாற்றும் பச்சோந்திக் கட்சிகளும் பெயர் விளம்பி கட்சிகளும் பழைய பத்தாம்பசலி வர்ணாசிரமத்தை அறம் என்ற போர்வையில் இனத்தை வளர்க்கும் கட்சிகளும் உண்டு. இத்தனை கட்சிகளும் நன்மை செய்வதாகத்தான் சொல்லுகின்றன. அதையும்நாம் மறுக்கமுடியாது. ஆனால்,

பாத்திரமறிந்து பிச்சையிட வேண்டுமல்லவா? நல்ல எண்ணங்களும் கொள்கைகளும் உடைய மனிதன் எந்த இடத்தில் இருந்தாலும் தனது சொந்த குணங்களை பிரகாசிக் கத்தான் செய்வான் அசல் வைரத்தைப் போலி இமிடேசன் வயிரமாக மாற்றமுடியுயாது. இமிடேசனை வைரமென்று சொல்லலாமே தவிர வைரமாக்கமுடியாது அந்த குணமும் அதற்கு வராது. அது போலவே கட்சித் தலைவர்கள் தங்கள் விருப்பமாகவும் பிறர்வற்புறுத்தல் மேலும் முக தாட்சிணைக் காகவும் பயமுறுத்தல் பேரிலும் ஒவ்வொருகட்சியும் அபேட் சகர்களை நியமனம் செய்துள்ளது என்பதை மறைக்கமுடியாது இது சூழ்நிலையால் ஏற்பட்ட நிலவரமாகும் மக்கள் முன்னே வெந்ததையும் வேகாததையுமான உணவைப் பறிமாறி இருக் கிறது! அதில் உடலுக்கு யேற்றதை எடுத்துக்கொண்டு

ஏற்காததை நீக்கிவிடவேண்டுமே தவிர பொன்னுல்செய்த சோறு என சீரணமாகாத உணவை விழுங்கக்கூடாதல்லவா?

அந்த முறையிலே எந்தக் கட்சி தனது அபேட்சகரை நிறுத்தி இருந்தாலும் நற்கீரனைப்போல குற்றங்கண்டால் நெற்றிக்கண்ணைத் திறந்தாலும் நீக்க வேண்டியதை நீக்க வேண்டியதே அத்தகை நிலையிலே இன்று நாட்டில் உலவி வரும் கதம்பக் கட்சிகளை யெல்லாம் மக்களாகிய நாம் தான் ஏற்றுக் கொண்டோம் அறியாமையால் இன்று தவறு என்று தோன்றியபோது வாடிய மலரை வாசனையற்ற சருகைத் தூக்கி எறிந்து விடுவது போல் பல கட்சிகளையும் களைந்து எறிந்து விட்டு இரண்டுகட்சிகளை ஏற்றுக்கொண்டு அவைகளுக்கே வோட்டளிக்கவேண்டும். இரண்டு கட்சிகளிலே ஓரளவு மக்களிடம் அதிகமான செல்வாக்கைப் பெற்றகட்சி ஒன்றை மட்டும் தேர்ந்தெடுக்க வேண்டும். அப்படி தேர்ந்த கட்சிகளில் நேர்மை தகுதி சொல்லும் செயலும் ஒன்று பட்டவரை தற்போது அவர் செய்கை யென்ன சென்ற காலங்களில் அவரது நன்னடத்தை யென்ன மக்கள் உபகாரியா? மக்களின் விரோதியா? அவர் தொழில் குடும்பம் பரம்பரையாக அவர் அவரை சுற்றி உள்ளவர்களுக்குச் செய்த நன்மை இவைகளை அந்தந்த ஊரில் உள்ளவர்கள் அறிந்துகொள்ள முடியும்; அறிந்து கொள்ளவேண்டும். இதை மக்களிடையே பரப்பி அந்த நல்லவரை ஆதரிக்கவேண்டும். அதேகட்சியில் மக்களுக்கு நச்சுப்பாம்பாக இருந்தவர் என்றால் செல்லாத ஓட்டும் அவர் பெயரில் பதிவாகக்கூடாது. இலங்கையில் பிறந்தவனெல்லாம் இராவணனாக முடியாது. கட்சி நிறுத்தியது என்பதற்காக கல்லையோ நச்சுமிகுந்த பாம்பையோ நாம் ஏற்றுக்கொள்ளக் கூடாது. இந்த அடிப்படையில் மக்கள் வாக்கு பயன்பட்டால் தமிழ்நாடு உலக வரிசையில் உயர்ந்துவிடும் என்பதை நினைக்கும்போது நாம் இமயத்தின் உச்சியில் நிற்கிறோமல்லவா!

இந்த நிலையிலே உதிரிக் கட்சிகள், மக்களுக்கு வேண்டாத கட்சிகளையெல்லாம் தலைமுழுகிவிடலாம். அந்தக் கட்சிகள் பேரிலே ஒரு வோட்டுகூட பதிவாகக் கூடாது. பயிருக்கு களையெடுத்தது போல குப்பைக்கீரையைப் போன்ற கட்சிகள் ஒழிந்து இரண்டே அரசியல் கட்சிகள் நிலைக்கச் செய்து விட்டால் ஜனநாயகம் என்ற முழு தத்துவத்தை தமிழ்நாடு உலகிற்கே எடுத்துக்காட்டிவிட்டது என்று எண்ணும்போது உலகமக்கள் தமிழ்நாட்டை யாத்திரை ஸ்தலமாக ஏற்றுவிடு

மல்லவா? அந்த அற்புத சாலவித்தையை மக்கள் நினைத்தால் நடந்துவிடும். நினைப்பார்களா! நினைக்கத்தான் வேண்டும்; செய்யத்தான்வேண்டும். இன்று இல்லாவிட்டாலும் நாளை தமிழன் செய்யத்தான் போகிறான். அறிவு ஆற்றல் வீரம் நிறைந்த தமிழ்க்குலம் ஆட்டு மந்தையாகவோ பாய்மரக் கப்பலாகவோ இனியும் வாழ விரும்பாது. எதிர்கால இளைஞர் கள் இதை செய்துகாட்டுவார்கள் என்பது எமது நம்பிக்கை. மேலும் நாட்டிலே இந்த நூற்றாண்டிலே நீண்டநாள் ஏமாற்ற அதுவும் தமிழனை ஏமாற்ற முடியாது. ஏமாற்றும் கட்சிகள் நீண்டநாள் வாழமுடியாது. வாழ்ந்தாலும் எந்தக் காரியத்தை யும் பேசுவதைத் தவிர செயலில் செய்ய முடியாது. அந்தக் கருத்துடன் நாம் பார்க்கும்போது சுதந்திரத்தை பெற்றதும் பெற்றதிலிருந்து தமிழ்நாட்டைப் பொருத்தவரை இதுவரை ஆளுங்கட்சியாக வளர்ந்து வருவதும் அது தன்னால் முடிந்த வரை பல நஷ்டங்களுக்கு ஆளானாலும் மக்கள் அபிவிருத்தி குறித்து நூற்றுக்கணக்கான திட்டங்களை நிறைவேற்றி வருகிறது. ஆட்சியிலிருக்கிறது என்பதை நாம் அறிவோம். தமிழ் நாட்டில் தோன்றிய பல கட்சிகளுள் மக்களுக்கு சேவை செய்வதை இலட்சியமாகக் கருதி போய்க்கொண்டி ருக்கிறது. இதுவரை மாறுபடவில்லை. மாற்ற முடியவுமில்லை. மாற்ற மக்கள் விரும்பியதுமில்லை; இந்த நிலையில் பல வருடங் களாக பெரும்பாலான மக்கள் நம்பிக்கையில் வளர்ந்துவரும் நல்லதொரு கட்சியை நாம் ஏற்றுக்கொள்ளத்தான் வேண் டும். இதைவிட அதிகப்படியாக நன்மை செய்யும் கட்சி நாட்டில் வளர்ச்சியடைகிறவரை, நாளை வரும் பலாக்காயை மனோராஜ்ஜியம் செய்யாமல் கையிலுள்ள களாக்காயை உபயோகப்படுத்தித்தான் ஆகவேண்டும். அதற்கிடையேநல்ல தொரு எதிர்க்கட்சியும் நன்மைசெய்வதில் போட்டிபோடுவ தாக ஏற்படத்தான் வேண்டும். அந்த எதிர்க்கட்சி தற்சமயம் எவை என்பதை மக்கள் அறிவதற்கு ஒருவழி. இன்று ஆளும் கட்சிக்கு அடுத்தபடியாக எது பெருவாரி அங்கத்தினர்களைக் கொண்டுள்ளதோ அதையே நாம் ஆதரிப்பதில் தவறில்லை. மக்கள் இரு கட்சிகளாக நன்மைசெய்வதில் பிரிக்கப்பட்டவர் களே தவிர இனத்திலே பாகுபாடு அல்ல என்பதை மனதி லிருத்தி நேர்மையான முறையில் வோட்டு அளிப்பீர்களென எதிர் பார்க்கிறோம். அந்த எதிர்க்கட்சியிலும் நல்லவராகத் தேர்ந்தெடுப்போமாக.

வான் சிறப்பு

(மறையின் மேன்மை)

வானத்தில் மழைவடிவில் விளையாடும் திருவருள், உலக நல்வாழ்க்கைக்கு மூலகாரணமாக இருந்துவருகிறது. அந்த ஆற்றலின் ஒரு கூறுதான் முகில் கண்டு மகிழும் மயில்; அதுதான், திருமயிலாப்பூரில் மயில் வடிவில் அம்மை வழிபாடு செய்யும் கபாலீச்சரம் என்பது; அம்மையும் கற்பகமாய் இருந்து விளங்கித் தமது கற்பினால் வான மழைக்கும் அதனால் அனைத்துக்கும் வகை செய்துவருகிறார்.

வாழ்க்கைக்கு மழை எவ்வளவு முக்கியமாய் இருக்கிறது; மழையே அமிழ்தம்; மழையே உணவும் உண்ணீரும்; மழையினால் உலகத்தில் பசி இல்லை. உழவர் உழுதொழில் நிகழ்கிறது; வாழ்க்கை சிறுப்பதும் பெருப்பதும் மழையினாலேயே; புல் முதலிய சிற்றுயிரும் தலையெடுப்பது அதனால்; கடல் வாழ் உயிர்களுக்கும் மழையே உதவி; விழாவும், வழிபாடும் தானமும் தவமும் ஒழுக்கமுமான உணர்ச்சிகளும் நடத்தைகளுமெல்லாம் நாட்டுக்கு மழையே வழங்குகிறது.

அருளாற்றலின் ஒரு கூறு மயில்வடிவில் வந்து இறைவனை வழிபாடு செய்வதுபோல, அதன் மற்றொரு கூறு மயிலாப்பூரில் திருவள்ளுவரின் பொது மறையாய் வந்து உலகுக்குத் தொண்டு செய்துவருகிறது. முறையே இவை விந்துவும் நாதமுமான சுத்த வித்தையாகிய அருள் வல்லமைகளே. ஆதலால், வான் மழைக்கும் இந்நூல் மழைக்கும் உலகம் எப்படி நன்றி செய்யுமோ தெரியவில்லை.

தானே முழுதுணர்ந்து தண்டமிழின் வெண்குறளால்
ஆனை அறமுதலா அந்நான்கும் - ஏனைருக்கு
ஊழின் உரைத்தாற்கும் ஒள்நீர் முகிலுக்கும்
வாழி. உலகு என் ஆற்றும் மற்று!

(.....நக்கீரர்).

என்று முன்னோரும் இப்படியே உருகி நினைத்திருக்கின்றனர்.

மழைபோல நாளும் சொரியும் குறள்வேதக் கருத்துக்களை, நாம் பொருள் செய்துகொள்வோம்; அவற்றை பலப்பல வகைகளில் ஆய்ந்து ஆய்ந்து உணர்ந்து நுகர்ந்து பயன் செய்வோம்; நானிலமெங்கும் விளங்கவைத்து, அனைவர்க்கும் அந்த அமிழ்ததத்தை, இருமருந்தை, ஊட்டுவோம். உணவும் வளமும் தொழிலும் அணியும் இல்லாமல், விழவும் வழிபாடும் கொடையும் தவமும் நடையும் இல்லாமல், இப்படி உலகம் மகிழ்ச்சி உணர்ச்சிகளில் வற்றிவிடாதபடி, அதன் வாழ்க்கைக்குக் குறளமிழ்தம் பொழிந்து தழையெடுக்கச் செய்வோம்.

குருகுலத் திருக்குறள் நிலையங்கள், உரிய அருளிடங்களிலெல்லாம் இயலமைத்து, இந்த அமிழ்த மழைப் பணியை இடையறாமல் நிகழ்த்திவரும் வாய்ப்பை இப்போது பெற்று வருகின்றன. மயிலாப்பூர்ப் பெரியோரும் அருகிலுள்ள சென்னைப் பெருமக்களும் 'மயில்' 'மறை' என இருபாலாராக ஊக்கத்துடன் கலந்துகொண்டு, குறள் மழையின் வளம் பெருக்கி உடன் நின்று உதவுமாறு, அன்புடன் அனைவரையும் கேட்டுக்கொள்ளுகிறோம்.

திருமயிலாப்பூர்க் கோயிலைக் கற்பகாம்பாள் பாகரான கபாலீச்சரர் திருமுன்னிலையில் அன்புடன் இன்று தொடங்கி வைக்கும் அறநிலைய ஆணையர் திருமிகு சாரங்கபாணி முதலியார் அவர்கள் திறத்துக்கு குருகுலம் பெரிதும் உருக்கங்கொள்கின்றது. அவர்கள் செய்நன்றியைக் குருகுலம் என்றும் நினைந்த நினைந்து ஈடுபட்டுவரும் என்பதை மகிழ்வுடன் தெரிவித்துக்கொள்கின்றோம்.

சென்னைக் கோயில் அலுவலகம்,
13—1—1962.

குருகுலத்தார்.

சுகாதாரமும் சுகவாழ்வும்

(அனுபவ மருத்துவம்)

மனிதன் முழு நலத்துடன் வாழ்வதற்கே 24 மணி நேரமும் முயலுகிறான் அதே சமயத்தில் எந்த லட்சியத் திற்காக வாழ்க்கையில் போராடுகிறானே அந்த திட்டத்தைத் தகர்த்துக் கொண்டே அந்த திட்டத்திற்குப் பாடுபடுகிறான். இது விந்தையான செயலல்லவா. ஆனல் அவன் அதைப் புரிந்து கொள்ளவில்லை என்பது தான் உண்மை. புதிராக தோன்றுகின்றதா? பொறுமையாய் படியுங்கள்.

உலகில் சீவராசிகள் தோன்றியது எதற்கு வாழ்வதற்கா அழிவதற்கா? இரண்டும் தான் ஆனல் முதல் கேள்வி விரும் பியது. இரண்டாவது கேள்வி விரும்பாதது. தன்னைத்தானே தன்னையறியாமலே அழித்துகொள்ளும் மனிதர்கள் பெரும் பாலும் வியாதியஸ்தர்களாக விளங்கிப் பிறரையும் பீடிக்கச் செய்கிறார்கள். மனிதன் காற்றோட்டமும் விசாலமுமான அறையில் வசிக்கவேண்டும். இது உயிர் வாழ்வதற்கு அத் தியாவசியமானது. அதே நேரத்தில் மனிதன் மூச்சுவிட முடியாத இருட்டறை. காற்றின் வாசனைக்குப் பதில் வெறுப் பான நெடிவீசும் அப்படி ஒரு இடம் அமைத்து பணம் திரட்டுவது பொறியை வைத்து எலியைப் பிடிப்பதுபோல மனிதன், மனித இனத்தைத் அழிப்பதற்கு இருட்டறையைத் தயாரித்திருப்பதும் அதை அனுமதித்து சர்க்கார் இருப்பதும் மனித இனத்தைத் தெரிந்தோ தெரியாமலோ அழித்துக் கொண்டிருக்கிறார்கள் அல்லவா? ஒரு பகுதியில் சுகாதார பிரசாரம் மறுபகுதியில் அதற்குத் தடை கல்லெப்போட்டு அழித்துக் கொண்டிருக்கிறார்கள் சுகாதாரம் வண்டியில் பூட்டிய, மாடாக தமிழ் நாட்டில் இருக்கிறது. ஒரு மாடு நடந்தால் மற்ற மாடுபடுத்துக் கொள்கிறது. சுகாதார நடவடிக்கை வண்டியைப் பூட்டி நிருத்தப்பட்டிருக்கிறது ஓட்டவுமில்லை. பூட்டைத் தரிக்கவுமிலலை.

இதற்கு அரசாங்கம் தயங்குகிறது. சென்னையில் உள்ள இருண்ட வீடுகளையும் நெருக்கமுள்ள ரோடுகளையும் அகற்றிப் புதுப்பிக்க வேண்டும் ஒவ்வொரு வீட்டுக்குப் பின்புறம் ரோடு கள் வேண்டும் அவை நடைமுறையில் வரும்போது வீட்டை இடிக்க வீட்டுக்காரர் சம்மதிக்கமாட்டார். அதற்கு நஷ்ட ஈடு கொடுக்கவும் சர்க்கார் முன்வராது இதனால் யார் பாதிக்கப்படுகிறார்கள். பணக்காரர்கள் தவிர ஏழை உயிர் வாழ்க்கை பாதிக்கபடுகிறது. வளரும் பயிரில நச்சுபூச்சி விழுகிறதென்றால் வயலுக்குச் சொந்தக்காரன் பணத்தைச் செலவு செய்யாமல் பூட்டிவத்துக் கொண்டால் பயிர் வளருமா? மனிதன் வாழ்வதற்குப் பணம் என்றால் வீட்டை இடிக்க ஏன் மறுக்க வேண்டும். காற்று விலைக்கு வாங்கியது 10 ஆயிரம் என்று செலவு கணக்கில் எழுதச் சொல்வது முடியாது என்றால் உயிர்க்கொலை செய்ய ஆயத்தப் பட்ட பட்டியலில் சேர்த்துவிடுவது சேமிப்பை சேர்ந்ததா? மனிதன் வாழத்தானே இத்தனை ஏற்பாடு? மனித இனம் வாழவில்லையென்றால் உலகம் சூன்யமாகவோ அல்லாத தாகவோ இருப்பதைப் பற்றி யார் கவலைப்படப் போகி றார்கள்.

மனித வாழ்விற்கு எந்த தியாகமும் செய்யலாம் அல்லவா ஏன் துணிந்து அரசாங்கம் அமல் நடத்தக்கூடாது. நெருக் கடியும் அசுத்தங்களையும் இருட்டறைகளையும் சீர்திருத்தம் டவுன்களிலே செய்துவிட்டால் மக்கள் வருமானத்தில் நூற்றுக்கு 90 மீதமாக சர்க்கார் செலவில் 100-99 மீதமாகும் மக்கள் இப்படி இருள் மண்டிய இடத்தில் குடியிருக்கவே கூடாது சமயங்களில் விஷக்காற்று அசுத்தக்காற்று சுவாசப் பையில் புகுந்து ரத்த நாணங்கள் வெடித்து வாய் மூக்கு வழியாக இரத்தம் வழிந்து இறந்து போவதைப் பார்க்கிறோம். ஆராச்சியில்லாத மண்டை பெருத்தவர்கள் பிசாசு என்பார் கள். இல்லை, விஷக்காற்று நரம்பைப் புடைத்து பிதுங்கி விடுவதே பேயும் அறைந்ததாக சொல்வது மனிதன் வாழ முடியாத வீடுகளை சாமான்கள் வைக்கும் நிலவரைக்கு உப யோகப் படுத்தக்கூட முடியாது அழுகிப்போகும் இந்தப் பொல்லாத வீட்டிலும் மக்கள் வசிக்கிறார்களே?

(வளரும்)

★

பொங்கல் நாளில் புதிய உணர்ச்சி

(முகில் வண்ணன்)

தமிழர் திருநாள் தை பொங்கல்,
தாமரை மலரே புதுதிங்கள்
உழைப்பவன் வெற்றி கண்டநாள்
உழவர் உள்ளம் பொங்கும் நாள்
எருதுபூட்டி ஏரோட்டி
இயற்கை புழுதியை சேராக்கி
இரைத்த விதையும் முளையாகி
கருத்து நாற்றாய் வந்தவுடன்
இழுத்துமுடிந்து கரையேற்றி
எருது துவைக்க எழிலி நட
கண்ணும் கருத்தும் நிழலாட
கண்டாய் கனியாய் செந்நெல்லாய்
முதிர்ந்த பழத்தின் முனையுதிராது
அன்பாய் வளத்து அடியில் அறுத்து
பொன்மணி போல பொருக்கி யெடுத்து
புத்தாண்டு தன்னில் பொங்கலிட்டு
பாலும் தேனும் பசுவின் நெய்யும்
பெய்து பொங்கி பெருமை கொண்ட
பழங்குடி தமிழன் பண்பை பாரீர்
மூத்த குடியின் முதல்வோனே
மும்மறை கண்ட தமிழ்மகனே
இமயம் வென்ற நெடியோனின்
இனத்தில் வந்த தமிழாகேள்
இன்ப பொங்கல் கண்டாயே பாசம்
இனத்தில் பொங்க கண்டாயா ?
காடு வெட்டி நகர்கண்டாய்
கழனி வெட்டி பயிர் கண்டாய் ?
இனத்தை கூட்டி நட்பாட
இயக்கும் பயிரை வளர்த்தாயா ?
இனத்தில் பிளவை கண்டாயே
இழுத்து பிணைக்க முயன்றாயா ?
உயர்வு தாழ்வை ஒழித்தாயா ? உறவில்
உள்ளங்கனிந்து இணைந்தாயா ?
சொந்த நாட்டில் தமிழினம்

சோர்ந்து கிடப்பதை கண்டாயா ?
அண்ட வந்தவணிகரிடம், தமிழன்
ஒண்டிபிழைப்பதை விண்டாயா ?
மனிதனை மனிதன் இழுத்துக்கொண்டு
நகரில் மாடாய் உழைப்பதை கண்டாயா ?
பார மேற்றிய வண்டி தள்ளி தமிழன்
பதைத்து நெளிவதை கண்டாயா ?
பசியால் துடிக்கும் தமிழரினம், நகரில்
பல்லை இளிப்பதை ஒழித்தாயா ?
வீதியிலே எங்கும் ஓரத்திலே, தமிழன்
ஒதுங்கி கிடப்பதை கண்டாயா ?
வீரத்தமிழன் என்றுயே, வீதியில்
பிச்சை எடுப்பதை விண்டாயா ?
கனகவிஜயன் கல் சுமக்க, தெய்வ
கண்ணகி தனக்கு சிலைவடித்தாய்
அண்டவந்த அகதிகளுக்கு தமிழ்
பெண் அடிமை யாவதை கண்டாயா ?
போர்களத்தில் மார்பை காட்டி,
அன்று புலியை போல சீறிய நீ
இன்று பொருள் களத்தில் அகதிகளின்
தமிழன் பொம்மையானதை கண்டாயா ?
இனத்தை காட்டி கொடுப்பதையும்
அகதி இட்டவேலையைச் செய்வதையும்
கணத்தில் தோன்றும் பசியை போக்க
இனத்தில் துரோகம் கண்டாயா ?
தமிழ் நாடாம் தலை நகரில்
தமிழன் தலைகுனிவதை கண்டாயா ?
கூலி என்றால் தமிழன் என்ற
கொச்சை மொழியை கேட்டாயா ?
வழி வழிசெய்த, வாணிபம்செய்து
வறுமை யொழிக்க மாட்டாயா ?
இனத்தில் பூக்கும் கட்சிகளெல்லாம்
சேர ஒதுக்கி தள்ளிவிடு
பொருமை பூத்த கட்சி யொன்றில்
புனிதனுக கலந்துவிடு
காளான் போல பூத்துவிட்ட
கண்டகண்ட கட்சி யெல்லாம்
காலையில் பூத்து மாலையில் மறையும்
காளான் என்பது உறுதியடா ?

ஆளும் கட்சி ஒன்றேதான்
அதை அச்சுருத்துவதும் ஒன்றேதான்
நல்லது கெட்டது இரண்டுதான்
நாட்டை ஆள்வது இரண்டுதான்
அடுக்கு மொழிகள் பேசுவதும்
ஆசைக் கனலை எழுப்புவதும்
ஒற்றுமைக்கு வழி இல்லையடா ?
ஒருவன் பிழைக்க வழிதானடா ?
சேர சோழ பாண்டியர்கள்
சேர்ந்து வாழ வில்லையடா ?
வீர தமிழர் கொஞ்சமடா உயிரை
விலைக்கு விற்றவர் அதிகமடா ?
தமிழன் என்று சொல்லிவிட்டு
தலைகுனிந்து வாழாதே ?
இனத்தை இனம் தேடுவதை
எண்ணிபார்த்து வாழாயடா ?
இனத்தில் பாச பொங்கலிட்டு
இனத்தை வளர்க்க வேண்டுமடா ?

அணிசேர் ஆயிழை

அல்லி மலர்ப்பூங் கொடியோ
அழகு தெளிக்கும் தண்நிலவோ
மல்லி அளிக்கும் நறுமணமோ
மாதமிழ் நல்கும் நற்சுகமோ
முல்லை ஒளியின் சுந்தரமோ
மோகன முறுவல் திருமதியோ
அல்லை ஆண்டு அவிர்குழலோ
ஆடும் தென்றல் மென் சுழலோ.
தெவிட்டாக் கரும்பின் தேன்மொழியோ
தெள்ளு தமிழின் சொற்சுவையோ
கவிஞர் இலக்கிய காவியமோ
கற்பனை ஊற்றின் பொருளழகோ
புவிமிசை காணாய் பொன்னுருவோ
போற்றிடும் சிற்பக் கவின்சிலையோ
நவிலரும் காதல் எந்தனுக்கு
நாவினில் தவழ்ந்திடும் கவியமுது.

இந்திராணி செல்வராஜ் B.A.

அகத்தி

[சித்தன்]

எளிமையுடையோரே பண்புடையோரே உலகுக்குப் பயனுடையோர். வெளித்தோற்றத்தால் எப்பொருளின் உண்மைத் தன்மையையும் உள்ளவாறு அறிந்து கொள்ளுதல் இயலாது. அதுபோலவே ஆரவாரமும் ஆடம்பரமும் உடையோர் ஒன்றுக்கும் பயனற்றவராயிருப்பர். ஆனால் மாயை நிறைந்த இவ்வுலக மக்கள் ஆரவாரத்தையும் ஆடம்பரத்தையும் கண்டு மயங்கி விளக்கு கண்ட விட்டிலைப்போல் கெட்டொழிந்து போகின்றனர். அழகுக்காகவும் ஆடம்பரத்திற்காகவும் பெரிய பெரிய மாளிகைகளின் முகப்பில் வைத்து பயிராக்கப்படுகிறது அயல்நாட்டு 'குரோட்டன்ஸ்' அதன் அழகில் மயங்கி அதனை வாங்குவதற்குப் போட்டிப்போட்டு பொருள் விரையம் செய்வர் நம் நாட்டு நாகரிக மோகம் கொண்டவர். ஆனால், அண்டையில் விளைந்து ஆதரிப்பாரின்றி கிடக்கின்றன எத்தனையோ அரிய செல்வங்கள். அத்தகைய பயிர்வகைகளில் ஒன்றுதான் நாம் யாவரும் நன்கறிந்த 'அகத்திக்கீரை'. அகத்திக் கீரையை மட்டும் நாம் தெரிந்து வைத்திருக்கிறோமே தவிர அதன் முழுத் தன்மைகளையும் பயனையும் அறிந்திருக்கவில்லை. அந்த அரிய எளியப் பயிரின் தன்மையை அறியப்புகுந்தால் வியப்பாக இருக்கிறது.

'மருந்தாகி தப்பா மரத்தற்றூற் செல்வம்
பெருந்தகையான் கட்படின்''

என்று அருளிச் சென்றார் செந்நாப்புலவர். பெருந்தகையாளன் செல்வம் மருந்தாகிய மரத்துக்கு ஒப்பானதென்று அவர் கூறியவாறு அகத்தி மருந்தாகி தப்பா மரமாக தன் இலை, பூ, மரப்பட்டை, வேர்ப்பட்டை இவை யாவற்றாலும் மக்களுக்கு மருந்தாகி நிற்கின்றது.

அகத்தி இந்தியாவில் எங்கும் ஏராளமாய் தோட்டக்கால் பயிராய் வளர்க்கப்படுகிறது. இது மரம்போல் 20 முதல் 30 அடிவரை வளரினும் இது செடி வகுப்பில் சேர்க்கப்படுகிறது. இது வெற்றிலைக் கொடிக்கால்களிலும் நீர் தங்கிய இடங்களிலும் பயிர்செய்யப் படுகின்றது. சாதாரண அகத்தியில் இரு வகையுண்டு. செந்நிற பூவுடையது செவ்வகத்தி யென்றும், வெள்ளைப்பூவுடையது அகத்தியென்றும் வழங்கப்படும்.

அகத்தியிலை முதலிய யாவும் சிறு கைப்புச் சுவையும் தட்பத் தன்மையும் கார்ப்புப் பிரிவுமுடையது. அகத்தியிலை

விஷ நாசினி (Antidote) யாகவும் சீதளகாரியாகவும் (Refrigerant) மலமிளக்கியாகவும் (Laxative) புழுக்கொல்லி யாகவும் (Vermifuge) விளங்குகிறது. இடுமருந்தின் தோடத்தை நீக்குதல் உடலிலெழும் பித்தத்தைத் தணித்தல், உணவைச் செரிப்பித்தல், கடுவனையும் வாயுவையு முண்டாக் கல் முதலியன இதன் பண்புகளாம்.

" மருந்திடுதல் போகுங்காண் வன்கிரந்தி வாய்வாம்
திருந்த அதனம் செரிக்கும்—வருந்தச்
சகத்திலெழு பித்தமது சாந்தியாம் நாளும்
அகத்தியிலை தின்னுமவர்க்கு." —(அகத்தியர் குணபாடம்)

இக்கீரை இடுமருந்தின் செய்கைவய முறிப்பதுபோல் மற்ற மருந்துகளின் செய்கையையும் முறிக்கு மாதலால் நோயா ளிக்கு மருந்தூட்டும் காலங்களில் இது நீக்கப்படுகிறது. மற்ற காலங்களில் நாடோறுமின்றி வேண்டும்பொழுது இதைக் கறியாகச் சமைத்துண்ண இது மேற்கூறிய நற்குணங்களைக் கொடுக்கும். அடிக்கடி இதைப் புசிக்கின் குருதியைக் கேட் டடையச் செய்து சொரி, சிரங்குகளை உண்டாக்கும். ஆனல் வயிற்றுப் புழு ஒழியும். தினந்தோறும் உண்டால் கடுவனை யும் வாயுவையு முண்டாக்கும்.

இக் கீரையின் சாற்றைப் பிழிந்து மூக்கில் இரண்டொரு துளிவிட நான்காம் முறைக் காய்ச்சல் ஒழியும். மற்றைய சுரங்களில் உடம்பின்மேல் பூசிவர வெப்பந் தணியும். தலை யிற் பூசி தலைமுழுக வெறி நீங்கும். சாறு ஒருபங்கும் தேன் ஐந்துபங்கும் கூட்டி நன்ரு யுறவுபடக்கலந்து உச்சியில் விரலால் தடவ குழந்தைகட்குக் காணும் நீர்க்கோவைபோம். இதையே மூக்கில்விட நீர்க்கேவை தலைவலி இவைகள் தீரும். இலையை அரைத்துப் புற்கை செய்து காயங்களுக்குக் கட்ட லாம். செவ்வகத்தியிலையின் குணம் ஐயத்தை உண்டாக்கும். அன்றியும் பற்பல சிந்தூரம் நவநீத பற்பம் தாகை சக்தி முதலியன செய்யவுதவும்.

" செவ்வந்திப் பன்னஞ் சிலேத்மதை யுண்டாக்கும்
வவ்வு பலசிந்தூரம் வைப்பதற்காம்—கவ்வு
நவநீத பஸ்பமதை நாளும் முடிப்பிக்குஞ்
சிவமாக்குந் தாளகத்தைத் தேர் " (அ. கு.)

மேற்கூறிய இவையெல்லாம் அகத்தியிலை ஒன்றின் பண்பும் பயனுமட்டுமே. மேலும் அதன் பூ, வேர், பட்டை முதலியனவும் அரிய மருந்தாகப் பயன்படுகிறது. அவற்றின் பண்புகளையும் பயன்களையும் பின்பு பார்ப்போம்.

★

குழந்தை பிணியும் நிவர்த்தியும்

(ச. ஆறுமுகநாதன் S. M. P)

பத்தியம்

கருவை வளர்க்கும் நெய்யுண் டோர்
கடுகு புளியோடு நல்லெண் ணெய்
கருவா டோடு பழஞ்சோறு
கரப்பான் பதார்த்தம் மீன்கோழி
அருந்துதல் நீக்கி ஆறும் நாள்
ஆறப் போட்டு ஏழாம் நாள்
பொருந்தும் ஓமநீர் தோய்ந்து
புளிச் சுட்டுணவில் சேர்த்திடலாம். (14)

கிரந்தி ரோகமும் தமிழ்நாடும்

கிரந்தி ரோகம் தமிழ் நாட்டு
கிளிமொழி பேசும் குழந்தைகளில்
இருபது சதமாம் பேர்க ளினை
எட்டிப் பிடித்து பிறக்கையிலே
வருந்தும் நிலையை உண்டாக்கும்
வகைக்குக் காரணம் தாய்தந்தை
இருபே ரிடையே மேகமென
இயம்பும் ரோகம் இருப்பது வாம். (15)

மேகநோய் உள்ள பெண்மணிகள்
மென்மைக் கருவுற்ற நிலைகண்டு
வேகமாய் மருத்துவர் இடஞ்சென்று
வேண்டிய ஆலோசனை கேட்டு
யூகமாய் நடத்தலும் கருவளர்க்கும்
எண்ணெய்யை உண்டலும் நலமென்று
சோகமாம் நிலைமை குழந்தை கட்கு
சூழா திருக்கப் பேணிடணும். (16)

குழந்தையை பற்றும் கிரந்தி ரோகம்
குறிப்பாய் தோல்நோயே யானலும்
மழலையர் தமக்கு பெரும் விபத்தை
வளர்த்திடும் நோயாய் மாறிடலாம்
வழங்கிடும் கிரந்தியை இருவகை யாய்
வகுத்தனர் ஒன்று கருங்கிரந்தி
புழங்கிடும் மற்றது செங்கிரந்தி
பிள்ளை நோயென் றுணர்வீரே ! (17)

கருங்கிரந்தியின் குறிகளும் நிவர்த்தியும்

பிறக்கும் குழந்தையை கருங் கிரந்தி
பீடித் திருந்தால் பிறந்த வுடன்
திறவா இருகண் தனைமூடி
சீறி அலரி அழும் உடலம்
குறையா சூடுதனைக் கொண்டும்
குரல்தான் நெறிந்தும் நாவரண்டும்
பிறவாம் மயக்கம் சுரணையற்ற
பிழையினைக் கொண்டும் இருப்பதுடன் (18)

உடலை முறித்து அழுவது வும்
ஒளிமுகம் சோற்வுற் றிருப்பது வும்
திடமிலா ஒருவித சத்தமுடன்
தினறித் தினறி கத்துவதும்
நடமிடும் உள்ளங் கால்க ளோடு
நல்லுள்ளங் கைகளில் கருமை நிறம்
படிந்துள்ள தறிந்திடில் கருங்கிரந்தி
படர்ந்துள குறியும் குணங்களுமாம். (19)

கருமைக் கிரந்தி கண்டிருப் பின்
கழுதைப் பாலொரு சங்கெடுத்து
இருதுளி இன்றேல் மூன்று துளி
இயம்பும் ஒனைன் இரத்த மிட்டு
ஒருமுறை காலை நேரம் மட்டும்
ஒழுங்காய் மூன்று நாள் கொடுப்பின்
இருப்பை மறந்து கருங் கிரந்தி
ஏகிடும் குளியல் முறை கேட்பீர். (20

செம்முள்ளி கிரந்தி நாயகத்தின்
சீரிய இலைகளை சமன் எடுத்து
செம்மையாய் இடித்து மண்பாண்டம்
சேர்த்தே படிநீர் ஆறிட்டு

வெம்மையாய் காய்ச்சி படிநான்காய்
வற்றச் செய்து வடிகட்டி
கம்மியாம் சூட்டில் நாள்மூன்று
குளிக்கச் செய்தல் நலமாகும். (21)

செங்கிரந்தியும் நிவர்த்தியும்

கருமைக் கிரந்தி தனில் இருந்து
கனமாய் வேற்றுமை இல்லாத
உருவில் இருக்கும் செங்கிரந்தி
உடைய குழந்தை பிறந்தவுடன்
குரலம் கம்மி பூனைகத்தும்
குன்றிய ஒலிபோல் அழுவதுடன்
பெரிதும் வயிறு பொறுமலுற்று
பிணங்கியே மலசலம் சிக்கலுற்றும் (22)

நீட்டி நிமிர்ந்து அசைவற்ற
நிலையில் குழந்தை கிடப்பதுவும்
காட்டும் நெஞ்சு நெற்றி யிவை
காண உயர்ந்து இருப்பதுவும்
மீட்டும் உள்ளங் கால்கைகள்
மெல்லிய உதடு இவைகளிலே
காட்டும் சிவந்த புள்ளிகளை
கண்டால் இவையே செங்கிரந்தி (23)

சீரிய குழந்தையை செங்கிரந்தி
சேர்ந்துள்ள நிலையைக் கண்டவுடன்
கோரோசனை வொரு குண்டு மணி
குறையா அளவு எடுத்ததினை
நேரிய தாய்ப்பால் தனில் கரைத்து
நித்தமும் காலை மாலைகளில்
கூறிய முறைப்படி நாள்மூன்று
கொடுப்பின் குணமுறும் இத்துடனே. (24)

செம்மூள்ளி இலையை தனித்திடித்து
சீராய் காய்ச்சி வடித்தெடுத்து
இரம்மிய மான கஷாயத்தில்
நாட்கள் மூன்று குளிப் பாட்டி
வெம்பிலா வெருகன் சேம்பிலையை
விரித்துமேல் வெள்ளைத் துணியிட்டு
கெம்பீரமாக குழந்தை யினை
கிடத்திடில் நல்ல பலன் நல்கும். (25)

குழந்தைகளுக்கு ஏற்படும் சந்நி

காய்ச்சல் உச்ச நிலையெய்த
காரணத்தாலே வரும் சந்நி
நோய்தான் கண்ட குழந்தைகளின்
நுண்ணிய உடலில் வெட்பந்தான்
காய்ந்திடும் நூற்றி நான்கு முதல்
காட்டிடும் டிகிரி நூற்றைந்தும்
போயே உயர்ந்து தட்பபத்தை
புகுத்தி மரணம் உண்டாகும். (26)

இயம்பிடும் சந்நி நோயது தான்
எழுகையில் சந்நியாய் தோற்றுமல்
அயர்ந்தே காய்ச்சல் வடிவத்தில்
அருமைக் குழந்தையை அண்டாமல்
முயற்சியால் அதனை முறியடிக்க
முடிந்ததைச் செய்ய முந்தாமல்
உயர்ந்திட விட்டு சிகிச்சைக்கு
உட்படச் செய்தல் அரிதாகும். (27)

சந்நி நோய்தான் பலவகைகள்
சாத்திரந் தன்னில் உண்டெனினும்
முந்திக் குழந்தைகள் தனைப்பற்றும்
முக்கிய சந்நிகள் யாதென்றால்
வந்திடும் ஆமசந்நி யுடன்
வரிசையாய் கோர மாந்தசந்நி
பிந்திடும் மாந்தசந்நி யதும்
பெரும்பால் குழந்தையைப் பற்றிடுமாம். (28)

ஆமசந்நி

குழந்தைகள் ஆமாசயம் கெட்டு
கொடும் புளிப்பேறி காய்ச்சல் கண்டு
பிழையுற்ற பின்னே சந்நியது
பெருகிக் குழந்தையின் உடற்சூட்டை
தழைத்திடச் செய்து கண்ணெரிச்சல்
தான்மிகச் செய்து கண்திறவா
அழுத நிலையில் குரல் கம்மி
அமிர்தம் உண்ணு திடர்செய்யும். (29)

(வளரும்)

மாசிடோனியா தேசத்துப் பழமொழிகள்

(தொகுத்தவர்—அன்புப்பழம் நீ)

தூக்கத்தில்கூட குள்ள நரிக்கு, கோழிக்குஞ்சுகளைப் பற்றிய கனவுதான்.

* * * * *

பால் புட்டிக்குள்ளிருந்தால் நாய் எப்படிக் குடிக்கும்?

* * * * *

பக்கத்து வீட்டுக்காரன் சட்டை தான் உன் மனைவிக்குப் பகட்டாகத் தெரியும்.

* * * * *

யோகியின் முகத்தில் காறி உமிழ்ந்தால் கூட, சுவர்க் கத்திலிருந்து பன்னீர் தெளிக்கிறது என்பார்.

* * * * *

ஒவ்வொரு புருஷனுக்கும் தன் மனைவி தான் உலகத்தி லேயே ரொம்பக் கெட்ட மனுஷி என்று அபிப்ராயம்.

* * * * *

கரண்டி பிடித்தவனெல்லாம் சமையற்காரனல்ல.

* * * * *

மீன்களுடன் வசிக்கும் நண்டு மீனினத்தைச் சேர்ந்த தல்ல; பறவைகளைப் போலிருப்பினும் வெளவால் பறவை யாகாது; பெண்டாட்டிக்கு அடங்கிய புருஷன் பலர் மத்தியி லிருப்பினும் புருஷனாகான்.

* * * * *

குழை யடிப்பவன் பெண்ணைத் தான் பிசாசு பிடிக்கும்.

* * * * *

சிங்கத்தின் பிடரியானால் என்ன? சிரைத்தால் வளராதா?

மகா அலெக்சாண்டரா யிருந்தாலும் அவன் மாதாவுக்குப் பாப்பா தானே?

* * * * *

மூட்டாளுக்குக் கிழ வயதில் கூடத் தலை நரைக்காது; தலைக்கு வேலை யிருந்தால் தானே?

* * * * *

கடனும் தரித்திரமும் ஒரு வீட்டில் இரண்டு குடித்தனக் காரர்கள்.

* * * * *

ஓட்டல்காரி அழகா யிருந்தால் மட்டமான 'ஒயின்கூட' இனிக்கும்.

* * * * *

கோமாளியும், குரங்கும் சினேகத்துக்கு லாயக்கற்ற வர்கள்.

* * * * *

ஒரு பிப்பாய் தேன் கெடுவதற்கு ஒரு 'ஸ்பூன்' தார் போதும்.

* * * * *

விருந்தாளியை நன்றாய் உபசரிக்கவேண்டுமானால் அவன் நாயைக் கூடத்தான் அன்புடன் பராமரிக்க வேண்டும்.

* * * * *

தரையை உழுவது கலப்பை; தலையை உழுவது பேனு.

* * * * *

சட்டம் தடுக்காத குற்றங்கள் பலவற்றை அவமானம் தடுத்து விடும்.

* * * * *

அழகான மனைவியைப் பார்க்க ஆயிரம் கண்கள் வேண்டியதில்லை. அந்த அழகைப் பார்க்க இரண்டே கண்கள் போதும்.

* * * * *

தரித்திரம் பிடித்தவன் கோழி தான் மலடா யிருக்கும்.

* * * * *

வேகமாய் நடந்தால் நீ தடுக்கி விழுவாய்! மெதுவாய் நடந்தால் உன் பின்னால் வருகிறவன் தடுக்கி விழுவான்.

* * * * *

கூண்டு அழகாயிருந்தாலென்ன; குஞ்சு பொறிக்குமா?

* * * * *

தேவைக்குச் சட்ட மில்லை.

ருஷியாவில் மூன்றாண்டுகள்

கருங்கடல்

தமிழாசிரியர், S. N. சொக்கலிங்கம் M. A.

சோவியத்து யூனியனில் வேலையில்லாதவர்களும் இல்லை, வேலை செய்யாதவர்களும் இல்லை. அங்கு மக்கள் ஓயாமல் உழைக்கவும், பாங்காக ஓய்வெடுத்துக் கொள்ளவும் அறிந்துள்ளனர். அடங்கத் தெரிந்தவனுக்குத்தான் அடக்கத் தெரியும் என்றகருத்துப்பட விவேகானந்தர் மொழிந்திருக்கிறார். இதைப்போல் உழைக்கத்தெரிந்தவனுக்குத்தான் ஓய்வெடுக்கத் தெரியும் என்று எண்ணத் தோன்றுகிறது. அலுப்புச் சலிப்பின்றி உழைத்துப் பழகாத நம்மில் பலர், கொஞ்சம் அதிகமாக வேலை பார்த்ததும் களைப்படைகிறோம். வேலையை விரைவில் பார்க்கும் முறையையும், சுவைகாணும் மனத்தையும், வளர்க்க வேண்டும். எல்லா வேலைகளிலும் சுவையுண்டு, செய்யும் வெளிவு சுளிவு அறிந்து அக்கறையோடு ஆற்றவேண்டும். வாரத்திற்கு ஒருநாள் இன்றியமையாதது என்ற கருத்துடன் ஞாயிறு நாளாக்கப்பட்டுள்ளது. கடினவேலை பார்க்கின்றவர்களுக்கு இரண்டு நாள் விடுமுறை கூட உண்டு. வாரத்தில் ஆறுநாட்கள் ஒரேவித வேலையில் ஆழ்ந்த மனம் ஒருநாள் அந்த வேலையிலிருந்து விடுபட்டு, விரும்பிய பொழுது போக்குகளில் இறங்கவேண்டும் அதே போல் ஆண்டில் பதினேரு மாதங்கள் கடுமையாக உழைத்த ஒவ்வொருவருக்கும் ஒரு மாத ஓய்வு அரசாங்கத்தால் தரப்படுகிறது உடல் நலமுடையவர்களுக்கு ஒருமாத விடுமுறையும், ஊதியமும் கிடைத்ததும் முகத்திலே மகிழ்ச்சி தட்டும். அவ்விடுமுறையில் சிலர் வோல்கா நதியில், கப்பலில் போய் பல இடங்களைப் பார்ப்பர், மற்றும் சிலர் காகஸஸ் மலைக்குச் செல்வர்; அங்கு நீண்ட வாழ்நாளுடையோர் பலர் இருப்பதாகவும், மலைக்காற்றும் ஊனும், தேனும் அதற்குத் துணைபுரிவதாகவும் சொல்லக்கேட்டிருக்கிறேன். பல்லாயிரக் காணக்கானோர் கருங்கடற்கரையிலுள்ள நலம் பேணுவிடுதிகளுக்குப் போய்த்தங்குவர். அவரவர் ஊதியத்திற்கு ஏற்ப பணம் கட்டினால் போதும்; மேலும் அலுவல் பார்க்கும் நிறுவனங்களும் துணை புரிகின்றன.

நோயைப் பெரும்பகையாக மதித்து நாட்டிலிருந்து அதை ஓட்டப் பல மருத்துவர்கள் முனைந்துள்ளனர். க்ஷயம் என்ற பொல்லாப் பிணியை அகற்றுவதற்குப் பெரும்பாடுபடுகின்றனர். இந்நோயை ஒழிக்கக் கங்கணம் கட்டவேண்டுமெனப் பெருந்தகை லெனின் கூறிய சிறந்த வாசகத்தை எல்லா நலம்பேணு விடுதிகளிலும் எழுதியுள்ளனர். க்ஷய நோயுடையவர்களுக்கு இரண்டு மாத விடுமுறையும், இரண்டு மாதச் சம்பளமும் கொடுத்து நலம் பேணு விடுதிகளுக்கு அனுப்புகின்றனர். இவ்விடுதிகளில், காரியங்கள் திட்டப்படிக்கு நடக்கின்றனர். காலையில் எழுந்ததும் உடற் பயிற்சி செய்வர்; நல்ல உடலுடையோர் கடலாடுவர்' நோயுடையவர்களின் உடல் நிலைக்கேற்பக் கடல் நீரைச் சூடாக்கிக் குளிக்க வழிசெய்துள்ளனர். காலை உணவு கொள்ளும் பொழுது உணவுத்துறை மருத்துவர் எல்லோருடைய அருகிலும் போய் நன்றாகச் சாப்பிடும்படி கட்டாயப் படுத்துவர். உண்ட பிறகுக் கடலோரத்தில் படுத்துக்கொண்டு கதிரொளியில் மூழ்குவர். எங்கு நோக்கினும் மக்கள் தம் வெண்ணிற மேனி பழுப்புறுவதற்குக் கடற்கரையில் மல்லாந்தும், கவிழ்ந்தும் மாறிமாறிப் படுத்துக் கொள்வதைக் காணலாம் உடல் பழுப்பாவதை அறிந்து நங்கைகளுக்குப் பூரிப்பு மேலிடும். உடலில் பழுப்பேற்றிக் கொண்டு செல்வதில் எல்லோருக்கும் பிரியம் இதைப் பார்த்தால் நமக்கு வேடிக்கையாகயிருக்கும். நம்மைப் பார்த்து வெய்யிலில் காயவில்லையா என்று கேட்பர். எங்கள் நாட்டில் வெயிலுக்குப் பஞ்சமில்லை உங்களைப் போல வெயில் தேடிச் செல்லவேண்டாம்; எங்கும் கிடைக்கும் என்று இலேசில் பதில் கூறி விடலாம். அருமையாகப் பகலுணவு கொண்ட பின்பு, சிலர் உறங்குவர்; சிலர் படிப்பர்; பலர் 'செஸ்' விளையாடுவர். மாலையில் பழம் அருந்தியதும் விளையாட்டு. எல்லாவயதினரும் விரும்ப ஆடுகிறார்கள். இரவு உணவு கொண்டதும் ஆண்களும், பெண்களும், நடனம் ஆடுவர்; கலந்து பாடுவர் பின்பு நகைச் சுவைபட ஒருவர் பேசுவதைக் கேட்டு எல்லோரும் மனம் விட்டுச் சிரித்து மகிழ்வார். ஆடிப் பாடி மகிழ்வர். களித்த பின்பு, தயிர் பருகிவிட்டு உறங்குவர். இவ்வாறு இரண்டு மாதம் உடலைச் சீராக ஓம்புவர் மனமகிழ்ச்

சியுடன் அடுத்த வருடமும் இங்கு வந்து ஆனந்தமாகப் பொழுது போக்கலாம் என்ற நினைப்புடனும், அவரவர் வேலை செய்யும் இடங்களுக்கும் பயணமாவர். நலம் பேணு விடுதி களில் தங்கியிருக்கும்போது உல்லாசப் பயணம் செல்லுவதும் உண்டு. பொருட் காட்சி சாலைகளையும், பூஞ்சோலைகளையும் கண்டு களிப்பெய்துவர்; கடலில் ஓடம் செலுத்துவர். பெரும் படகிலும், சிறு கப்பலிலும் நெடுந்தூரம் போய் வருவர். மலையில் ஏறி இன்பங் காணுவதும் உண்டு.

நலம் பேணும் விடுதியில் யாவரும் ஒன்றாய்க் கலந்து வாழ் கின்றனர். பொறியர், ஆலைத் தொழிலாளர், ஆசிரியர், பாக் டரித் தொழிலாளர், இரயில்வே ஊழியர், தொழிற்கூடத் தொழிலாளர்கள், உணவு விடுதி ஊழியர், நாடக அரங்கங் களில் பணி புரிவோர், சினிமாக் கூடங்களில் வேலை செய் வோர், செய்திதாள் அலுவலகச் சிப்பந்திகள், கூட்டுப்பண் ணை உழவர், சுரங்கத் தொழிலார்கள் இன்னும் பிறபிற பணி கள் ஆற்றுவோர் ஆகிய எல்லோரும் சமநோக்குடன் வேறு பாடில்லாமல் ஒன்றாய்க் கலந்து ஒரே இடத்தில் தங்குகின் றனர். சம்பள விகிதத்திற்கேற்பக் கட்டும் தொகை வேறு பட்டாலும், வசதிகளில் வேறுபாடுகள் இருப்பதில்லை. உட லுரத்தைச் செம்மைப் படுத்துவதற்கும், எஃகு நரம்பு, ஏகழுத்தும் தடைபடாக் குருதியோட்டமும் பெருவதற்கும் 'உடற்பயிற்சிக் களரி (Gynonasium) அமைந்துள்ளது இரவுப் பொழுதில் கடலுக்கு மிக அண்மையில் படுத்து உறங்குவதற்கும் வழிவகைகள் செய்யப் பட்டுள்ளன. உடல் நல விதிகள், உடலோம்பும் முறைகள் ஆகியவன குறித்துப் பேசும்படக் காட்சிகள் காட்டப்படும். அளவுக்கு மீறி ஊதிப் போய், பானை போலத் தொந்தியுடன் ஆமைபோல அசைந் தும் நடக்கமுடியாமல் தத்தளிப் போரின் கெட்டப் பழக்க வழக்கங்களை எடுத்துக் காட்டிச் சீரான உடற்கட்டு அமைத் துக்கொள்ளுவற்குரிய நன்னெறியை விளக்கும் படக்காட்சி காட்டப்படும்.

தொடரும்

" அழகும் - அறிவும் "

என். எஸ். இராமன்

" உருவுகண்டெ முள்ளாமை வேண்டுந் உருள்பொருள் தேர்க்கு
அச்சானி யன்னர் ருடைத்து," —(குறள்)

அழகு - என்ற வார்த்தையே, இவளிட மிருந்துதான் உண்டானதோ ? என்று எண்ணுகின்ற அளவுக்கு அவள் அழகாக இல்லாவிட்டாலும், அவ் வட்டாரத்தின் இளவெட்டுகள், அவளது கட்டான உடலையும் - பட்டான மேளியையும் தொட்டாவது பார்க்கலாமென, கண் கொட்டாமல் பார்ப்பதோடு, தனக்குக் கிட்டாதாவெனக் கொட்டாவி விட்டுக் கொண்டுதா னிருந்தார்கள்.

'நளினு'—பெயருக்கேற்ப உடலும் உள்ளமும் கொண்ட ஒரு நல்ல குடும்பத்தின் ஒரே செல்லப்பெண் ! உலகத்து எல்லா சுகத்தையும் அனுபவிக்கு மளவிற்கு அந்தஸ்தும் ஆஸ்தியும் இல்லாவிட்டாலும், ஏதோ கொஞ்சம் : இல்லாமலும் இல்லே ! பெற்றோர்களின் செல்வமும், சிறிது இருந்ததால் கல்லூரியில் படிக்கும் மாணவிகளில் ஒருத்தியாக இருக்கிருள்.

அவள் அழகிற்காகத் தன்னே அர்ப்பணிக்க எண்ணற்ற இளைஞர்கள் ஏங்கிக் கிடந்தும், ஆண்களேக் காதலிக்கும் பழமையை ஒதுக்கி, ஒரு புதுமையான புரட்சிகரமானக் காதலேப் பெற்ருள் ! வீட்டிலிருந்து புறப்பட்டுக் கல்லூரி போய் சேரும்வரை, கல்லூரியிலிருந்து வீடுவந்து சேரும்வரை காவலனேப்போல் பாதுகாப்பாக பின்தொடர்ந்து வந்துபோகும் காளேயர்கள் கணக்கற்றபேர்! அவள் கண்பார்வை ஒருமுறை நம்மீது விழாதா என வழியெங்கும் விழி பிதுங்கப் பார்த்து நிற்கும் வாலிபர்கள் பலபேர் ! என்னேமட்டும் அவள் ஒருமுறை பார்த்தால் போதும் ! அப்படியே என் அழகில் மயங்கி என்னே மணந்துகொள்வாள். எனக் கூறிக் கொண்டு, விதவிதமான விலேயுயர்ந்த ஆடைகளே அணிந்து வரும் மாணவர்கள் பலபேர் ! இப்படியாக, அவள் காதலுக்காகக் காத்திருக்கும் இத்தனேக் காதலர்களுக்கும் கிடைக்காத பாக்கியம் பெற்ற நளினுவின் அந்தப் புதுமையானக் காதலன் யார் ?

சூரியனைக் கண்ட தாமரையைப் போல, சந்திரனைக் கண்ட அல்லியைப் போல, தன் மகன் சான்றோன் எனக் கேட்ட தாயைப்போல - பார்வையைப் பெற்ற குருடனைப் போல - பிரிந்த காதலனைக் கண்ட காதலியைப் போல - 'அறிவைக் கண்ட நளினு!' என்றுதான் அவளை - அவள் காதலை உவமை கூற முடியும். ஒவ்வொரு வெள்ளிக்கிழமையும் நளினுவின் உள்ளத்திலே உவகை! உடலிலே துள்ளல்! உணர்ச்சியிலே இன்பம்! இன்பம்!! காரணம் - அவள் காதலன் வரும் நாள். அவன் வந்ததும் அவள் அவனைக் கட்டியணைத்து முத்தமிடும் காட்சி, பிள்ளை யில்லாதவள் - பத்தாண்டிற்குப் பிறகு தான் பெற்ற பிள்ளையை முத்தமிடும் தாயைப் போன்றதாகும். ஆம்! அன்று முழுவதும் நளினுவின் எண்ணமும் செய்கையும் அவள் காதலனிடம் - அறிவினிடம்தான்!.....அன்று மாலையே, அந்தக் காதலன் கேட்பாரற்றுப் போய்விடுவான்! ஏன்?.....அடுத்து வருகின்ற வெள்ளிக்கிழமை இன்றே வரக்கூடாதா? என்ற ஏக்கம் வரக் காரணம் என்ன?.....இடைப்பட்ட நாட்களில் அவன் வராத காரணம் என்ன?.....அவன் வரவிற்காகக் கவலையுடன் காத்திருந்து, அவன் வந்ததும் கண்டு மகிழ்ந்து, களிப்பு மிகப்பெற்று, பின் சிலமணி நேரங்களில் ஒதுக்கித் தள்ளி விடுவதின் காரணம்தான் என்ன?

தென்னகத்து மக்களெல்லாம் வெள்ளிக்கிழமை தோறும், தன்னகத்தில் இன்முகத்தோடு இருப்பதற்குக் காரணம் - அன்று 'அறிவு' வருவதால்! ஆம்! "அறிவு" என்ற பத்திரிக்கை வருவதால்! பத்திரிக்கையின் பெயரைப் போன்றே அதில் அடங்கியுள்ள பொருள்களும் அறிவைக் கொடுக்கக்கூடிய - அறிவை பயன்படுத்தக்கூடிய - அறிவை பயன்படுத்தக் கூடியனவாக இருக்கும். அதில் வருகின்ற தலையங்கத்தைப் படித்தால் நாட்டின் அரசியல் புரியும். படங்களைப் பார்த்தால் உலக நிலைபுரியும்! மக்களின் வாழ்க்கைப் புரியும்!! நகைச்சுவையைப் படிக்கப்படிக்க விலா வலிக்கும். கதைகளைப் படிக்கப்படிக்க இன்பம் சுரக்கும். கற்பனைப் பிறக்கும்! திரைப்பட விமர்சனத்தைப் படித்தால் படம் பார்த்ததை ஒக்கும். தொடர்கதையைப் படித்தால் மனம் தவிக்கும்!—அடுத்து எப்போது வரும் என்று?

தமிழகத்தின் தலைசிறந்த எழுத்தாளரும் - அறிவுப் பத்திரிகையின் ஆசிரியருமான 'சுந்தரம்' - 'அழகு' என்ற பெயரில், அப் பத்திரிக்கையில் "உன்னை நான் காதலிக்கிறேன்" என்ற ஒரு காதல் காவியத்தை தொடர்கதையாக ஆரம்பித்தும் அப் பத்திரிக்கையின் மதிப்பும் - விற்பனையும் பன்மடங்காகி விடுகிறது! வாலிபர்கள் முதல் வயோதிகர்கள் வரை - படிக்கத் தெரிந்த சிறுமிமுதல் பாட்டிகள் வரை -

காதலர்கள் - காதலிகள் - காதலித், தொட்டவர்கள் முதல் விட்டவர்கள்வரை - இக் கதையினுல் காதலிக்க எண்ணுகின்றவர்களாக அத்தனேப பேர்கள் உள்ளத்திலும் உதட்டிலும் '' உன்னே நான் காதலிக்கிறேன் '' என்ற வார்த்தை ஒலித்துக் கொண்டிருக்கிறது. அந்த அளவிற்குக் கதையின் அமைப்பும் சிறப்பும் இருக்கும்போது - ஆசிரியர் சுந்தரத்தின் கதை, கவிதை, கட்டுரைகளே தன் உயிரைவிட மேலாகப் போற்றிப் புகழ்கின்ற நளினு, அவரை, தெய்வமாக - காதலனுக மதித்துவரும், அவள் உள்ளத்தையும் அத் தொடர்கதை கொள்ளே கொள்ளாது விடுமா? இத் தொடர்கதையைப் படிக்கும் பல்லாயிரக் கணக்கான மக்களிடமிருந்து ஆசிரியருக்கு அன்ருடம் வரும் பாராட்டுக் கடிதங்களேக் கொடுக்க அஞ்சல் நிலேயத்தில் தனி ஒரு ஊழியரைப் போடும் அளவிற் காகிவிடுகிறது. கடிதங்களிலே - பல பெண்கள் - ' உங்கள் வயதென்ன? திருமண மாகிவிட்டதா? உங்கள் புகைப்படமொன்று தயவு செய்து அனுப்பி வைப்பீர்களா? என்று மறைமுகமாக எழுதுவதுடன் சில பெண்கள் வெளிப்படையாகவே, ' உங்களே நான் காதலிக்கிறேன்! ஏற்றுக் கொள்வீர்களா?' என்றும் எழுதத் தவறவில்லே. நளினுவைப் பற்றிக் கேட்க வேண்டுமா?...தொடர் கதையில் காதலனே எதிர் நோக்கிக் காதலியும் காதலியை எதிர்நோக்கிக் காதலனும் காத்திருக்கும்போது அவர்களுடைய உள்ளத்தின் உணர்ச்சிப் போராட்டங்களேயும், சந்தித்துப் பேசி மகிழும் அந்தக் காதல் கனி மொழியின் அழகையும் படிக்கும் போது நளினுவின் உள்ளம் புல்லரிக்காமல் இருந்ததே கிடையாது. நளினு - அந்தக் காதலியாகவும், ஆசிரியர் - அந்தக் காதலனுகவும் மாறி, அவள் மனக்கண்ணிலே களிநடனம் புரிந்துகொண்டே யிருக்கும்.....கதையில் கொண்ட பற்று நாளடைவில் ஆசிரியரிடம் பாசமாக மாறுகிறது. இவ்வளவு அழகாக உணர்ச்சி ததும்ப காதலர்களின் நிலேயை எழுதுகிருரே! எப்படி எழுதுகிருர்? இவரும் யாரையாவது காதலிக்கிருரோ! அல்லது காதலித்த அந்த அனுபவத்தை வைத்து எழுதுகிருரா? காதலேப் பற்றி இவ்வளவு அழகாக எழுதுகிருரே! காதலனேப் பற்றியும் காதலியைப் பற்றியும் அவ்வளவு அழகானவர்கள் என்று எழுதுகிருரே!.....இவர் எப்படியிருப்பார்? $5\frac{1}{4}$ அடி உயரம் 25 வயது! நடுத்தர உடலமைப்பு! சிவந்த மேனி! அலே யலேயான கேசங்கள்! அகன்ற நெற்றி, நீண்ட மூக்கு, ஒரு முறை பார்த்தால் மறக்க முடியாதக் கண்கள், சிரித்த முகம், சில்க் ஜிப்பா, ஜரிகை வேஷ்டி.....இப்படியாக ஆசிரியரின் அழகையும் மனக் கண்சுளால் எடை போட்டு இன்புறுகிருள்! அந்த இன்பத்தின் மகிழ்ச்சி ஆசிரியர்பால் காதலாக மாறி வளர்கிறது.

உண்மைக் காதலர்களின் முடிவைப் போன்றே எல்லா ஆசிரியர் களும் எழுதும் முடிவைப்போன்றே இந்த ஆசிரியரும் அத் தொடா கதையையும் முடித்திருந்தார். ஆனல், அதைத் தொடர்ந்து வந்த அன்பு - கண்டனக் கடிதங்கள், நீங்கள் இவ்வளவு சீக்கிரம் எங்களை ஏமாற்றுவீர்கள் என்று நாங்கள் எதிர்பார்க்கவில்லை ! பரவாயில்லை !! ஆனல், என்னயிருந்தாலும் அந்தக் காதலர்களை இவ்வளவு அநியாய மாக, அக்கிரமமாகக் கொன்றிருக்க வேண்டாம். உங்கள் அடுத்தத் தொடர்கதையை ஆவலோடு எதிர்பார்த் திருக்கிறேம் ! அக் கதையி லாவது காதலர்களை வாழவிடுங்கள் என்றெல்லாம் கணக்கற்ற கடிதங்கள் சென்றன ! குறிப்பாக, நளினுவின் கடிதம், அவள் உள் ளத்தைத் தெளிவாகக் காட்டிக்கொடுக்கும் நிலையிலே இருந்தது !

அவ்வார 'அறிவு' பத்திரிக்கையின் 'புரூப் - காப்பி' திருத்திக் கொண்டிருந்த உதவி ஆசிரியர், "சார்" என்ற ஒரு இனிய குரல் கேட்டு தலை நிமிர்ந்து நோக்குகிறார். "நான் ஆசிரியரைப் பார்க்க வேண்டும்" எனக் கூறியதோடு, தான் யார் என்பதையும் கூறி நிற்கும் ஒரு பெண்ணைக் காணுகிறார். ஆசிரியர் வரும் நேரமாதலால், அவளை அழைத்துச் சென்று ஆசிரியரின் அறையிலே அமரச் செய்து வருகிறார் உதவியாசிரியர். நளினுவின் கண்கள் அவ்வறை முழு வதும் வட்டமிடுகின்றன. ஆசிரியரின் புகைப்படம் ஏதாவது இருக் கிறதா ? என்று ! ஆனல், அங்கே ஒரு பெரிய அழகான மேசை. ஆசிரியர் உட்கார ஒரு நாற்காலி. அதற்கு முன்னே மூன்று நாற் காலிகள். மேசையின் மீது 'ஒரு பேப்பர் வெயிட்' ஒரு மைக்கூடு, ஒரு சிறு கடிகாரம், எழுதுவதற்குரிய ஒரு பெரிய அட்டை. அதன் மீது 'கிளிப்' செய்து வைக்கப்பட்ட கொஞ்சம் 'பேப்பர்கள்' மேலே 'பேன்' இவைகள்தான் அந்த அறையிலுள்ள பொருள்கள். இந்நிலையிலிருந்து, ஆசிரியர் மிகவும் சிக்கனத்தையும், சுத்தத்தையும், சுகத்தையும் விரும்புபவர் என்பது தெள்ளென விளங்குகிறது.

ஆசிரியர் வந்தால், 'வணக்கம்' என்பதா 'நமஸ்தே' என்பதா 'குட்மார்னிங்' என்பதா ? பிறகு, எப்படிப் பேச்சைத் துவக்கி, தன் உள்ளத்தைத் திறந்து காட்டுவது, என்ற பிரச்சனையில் இறங்கிக் குழம்பிக் கொண்டிருக்கிறார்கள். ஆசிரியர் எழுதியக் கதைகள் அத்தனையிலும் வரும் காதலர்கள், தங்கள் முதல் சந்திப்பில் பேசாமல் - கண்களால் பேசிச் சென்ற நிலைதான் நினைவுக்கு வருகிறது அப்படி யென்றால், இன்று நாமும் அப்படி பேசாமலே போய்விடுவோமா ? என்றெல்லாம் சிந்தித்துக் கொண்டிருந்தவளுக்கு ஒரு முடிவும் கிடைக்கவில்லை. எழுந்து சென்று 'பேனை' ஓடச் செய்துவிட்டு

வந்து அமர்கிருள். அந்தக் காற்றின் வேகத்திலே மேசையின் மீதிருந்த 'பேப்பர்கள்' படபடக்கின்றன. அதில் ஒரு பேப்பரைப் பிடித்துப் பார்க்கிருள். அந்தப் பக்கத்திலே கோர்வையாக அழகானக் கையெழுத் திருப்பதைக் கண்டு, அதை ஆசிரியர்தான் எழுதியிருக்க வேண்டும் என்ற முடிவுகொண்டு அதைப் படித்தும் பார்க்கிருள். அப்போது ஒரு பையன் வந்து, ஆசிரியர் வருவதைக் கூறிச் செல் கிருன். உடனே, நளினு தன் ஆடைகளையும் அழகையும் சரிசெய்து கொண்டு, மனம் 'திக்-திக்' என அடித்துக்கொள்ள, வருகின்றவரை காணத் துடித்துக் கொண்டிருக்கிருள். அப்போது ஆசிரியர் வரு கிருர். அவரைக் கண்ட நளினுவின் இதயமே 'பக்' என நின்று விட்டதைப் போலாகிறது! உடலெல்லாம் விபர்த்து மூர்ச்சையாகும் நிலைக்கு வந்துவிடுகிருள். காரணம் அவளது கற்பனை உருவம் தலை கீழாக அங்கே இருப்பதால்! நான்கடி உயரம்! கறுத்த உடல்! வயது 40 இருக்கும். வழுக்குத் தலை! உருண்ட பெரிய விழிகள்! இதுதான் அவரது தோற்றம். நளினுவின் நிலையைப் புரிந்துகொள்ள முடியாத ஆசிரியரும் சிறிது திகைத்து, என்னம்மா? என்ன வேணும்?..... நான்தான் ஆசிரியர்!" எனக் கேட்க, அக்குரல் கேட்டு கொஞ்சம் தெளிவு பெற்ற நளினு, நிலைமையை சமாளிக்க, "ஒண்ணுமில்லே... நான்.....உங்கள்.....கதை.....தொடர்கதை.....ரொம்ப நல்லா... இருந்துதின்னு .....சொல்லிவிட்டுப் போக வந்தேன்....." என்று தட்டுத் தடுமாறி உளறிக்கொண்டே வேகமாக வெளியேறி விடுகிருள்! ஆசிரியருக்கும் ஒன்றும் புரியாமல் நிற்கிருர்.

வீடுவந்த நளினு தன்னை நன்ருக ஆசுவாசப் படுத்திக் கொள் கிருள். அப்போது, ஆசிரியரின் மேஜை மீதிருந்த கைப்பிரிதியின் வாக்கியங்கள் அவள் நினைவுக்கு வருகிறது! "சுந்தர் என்ற பெய ருடையவர்க ளெல்லோரும் அழகாக இருந்து விடுவதில்லே! லட்சுமி என்ற பெயருடையவர்கள் எல்லாம் செல்வச் சிறப்பிலே வாழ்ந்து விடுவதில்லே! ஆதலால் பெயரைக்கொண்டு நிலையையும், உருவத் தைக் கண்டு அறிவையும் எடை போட முடியாது! கூடாது!! அழகாக இருப்பவர்கள் எல்லோரும் அறிவாளிகள்! அறிவாளிகள் அத்தனை பேர்களும் அழகானவர்கள்! என்றிருப்பதும் - நினைப்பதும் தவறு! அதுபோன்றே அழகற்றவர்களெல்லாம், அறிவிலிகள்! அறிவாளிக ளெல்லாம் அருபிகள்! என்று நினைப்பதும் தவறு!" என்ற வார்த் தைகள் அவள் நினைவிலே நிலைக்கிறது!.

கீல்வாத ரோகங்களும்-சிகிச்சை முறைகளும்

By Dr. A. E. SHANMUGHAM

❋

கீல் வாத ரோகத்தில் ஆம வாதம், ரக்த வாதம் என்ற இரு வித வாதங்கள் உண்டு. முதலில் ஆமவாதத்தைப்பற்றி கவனிப்போம்.

ஆமவாதத்தில் வாதம் மிகுந்தால் அதிக வலியும் பித்த மிகுந்தால் சருமத்தில் எரிவு, சருமம் சிவந்திருத்தலும், கபம் மிகுந்தால் உடலில் நீரில் நனைக்கப்பட்ட துணியைப் போர்த் தியதைப் போன்ற உணர்ச்சி, உடலில் ஊரலும் ஏற்படலாம்.

ஆம வாதத்தில் ஒரு தோஷம் ஏற்பட்டால் சுலபமாக குணப்படும். இரு தோஷங்கள் ஏற்படின் சிரமத்துடன் நிவர்த்திக்கலாம்-மூத்தோஷங்கள் (வாயு, பித்தம், கபம் இவை மூன்றும்) தோஷங்களடைந்தால் சிகிச்சைகளுக்கு வசப்படுவது என்பது எளிதல்ல.

ஆம வாதத்தின் குறிகள்: கடினமான வேலைகளை கை, கால்களுக்கு கொடுப்பதால் உடல்களைப்படைந்து அரோசிகம் உண்டாகி கை கால்கள் தன்னிச்சையாக இயக்க முடியாமல் போகிறது. அதிக தூரம் நடத்தலும் பளுவான சாமான்களை இழுத்தலும், நீரில் அதிக நேரம் நீந்துதலும் ஆகிய இவைகளை உதாரணமாகச் சொல்லலாம். ஆகவே கை கால்கள், தலை, கணுக்கால் இடுப்பு, துடை, மூட்டுக்கள் இவைகள் அழற்சி யடைந்து வீங்கலாம். இதனால் ஊசிப் போட்டு குத்துவது போன்ற வலியும் காணும். பசியின்மை, வாயில் நீர் ஊருதல், நாக்கு ருசி கெடுதல், தோலில் எரிச்சல், குறைவான மூத்திரம், வயிற்றுவலி, வயிற்றைத் தொட்டால் கடினமாயிருத்தல்—பகலில் தூக்கம் வருதல்—இரவில் தூக்க மில்லாமை. தாகம், வாந்தி, மயக்கம், மார்புவலி—மலச்சிக்கல், உடலில் தென்பு இன்மை, வயிற்றில் கடாபுடா சப்தம், குடல் கோளாறுகள் இவை யாவும் ஆமவாதம் உண்டான பின் குறிகளாம்.

பத்தியங்கள்: ஆம வாதத்தில் ஜ்வரமிருக்கும்போது பார்லி தண்ணீர் பால், பழரசம், நிறைய ஜலம், சோடா,

பழைய புளியைக் கரைத்து இனிப்பு சேர்த்த சர்பத் இவை கள் நல்லவை. இறைச்சி, பருப்பு வகைகள், மதுசாரங்கள். தயிர் இனிப்பு வகைகள் முதலியவை கூடாதவையாம். சிகிச்சைபின்போது பத்திய பாகங்கள் நன்கு கவனிக்கப் படல் வேண்டும். அதிக ஆகாரம் சாப்பிட்டால் குடலில் தங்கி, மலபந்தம் ஏற்படலாம் - நோய் எளிதில் குணப்பட இவை வழிகோலா. ஆகவே எளிதில் ஜீரணிக்கக் கூடிய வையும், மலச்சிக்கல் ஏற்படுத்தக் கூடாதவையுமே நல்ல பத்திய ஆகாரங்களாகும்.

சிகிச்சைகள் : மூட்டுக்கள் வீங்கி, வலிகள் இருக்கும் போது ரஸ்நாதி கஷாயத்துடன் யோகராஜகுக்கலு சாப்பிட வேண்டும். சீரணத்துடன் ஆமவாதம் ஏற்பட்டிருந்தால் ஹிங்கு கேஸ்வர ரசம் 2 நெல்லெடை தினசரி 2 அல்லது 3 வேளைக் கொடுக்கலாம். மூட்டுக்கள் வீங்கி நீர் கோர்த் திருந்தால் மஹா மாஷ தைலம் மேலே பூசி உள்ளுக்கு ரஸ ராஜரஸம் 5 நெல்லெடையும் பிருஹத் சகலாத்யா கிருதம் அரை தோலாவும் சுடும் பாலில் கலந்து கொடுத்துவரலாம். இந்நிலைகளில் பொதுவாக ஆங்கில முறை மருந்தான 3 நெல் லெடை பொடாஷியம் அயோடைடும் 5 நெல்லெடை சோடா சாலி சிலேட்டும் கலந்து வெந்நீரில் கொடுத்தால் நன்மை பயக்கும் தினசரி 2 வேளை கொடுத்து வரலாம்.

மேலும் கந்தர்வ ஹஸ்தாதி கஷாயம், தாத்ரீ தைலம் ஹிங்கு த்ரிகுண தைலம் இவைகளை உள்ளுக்குச் சாப்பிட வேண்டும். பிண்ட தைலம் சளிசார தைலம், நாராயண தைலம், மஹாமாஷ தைலம், க்ஷீரபலா தைலம் இவைகளை மேல் பூச்சு தைலங்களாவும் உபயோகித்து வரலாம்.

சாதாரணமாக உபயோகிக்கப்படும் இதர மருந்துகளாவன : பிருஹத்வாத சிந்தாமணி ரஸம். சாமிர் பன்னக ரஸம், வாதாரி ரஸம் வாதகஜாங்குஷ ரஸம், அமர் சுந்தர்வடி, எர்ரண்டபாகம், பலாரிஷ்டம் மஹா மஞ்சிஷ்டியாதிப்ரிஷ்டம், தான் வந்திர தையிம், தான் வந்திரவடி முதலியவைகளை நெய்ப்புள்ள தைலல்களை சூடு செய்து ஒத்தடம் தரலாம். மேலுக்கும் உபயோகித்தும் வரலாம்.

ரக்த வாதத்தைப்பற்றிப் பார்ப்போம் இப்பொழுது.

ரக்தவாதம் : இதில் முதன் முதலாக காலில் ஒரு பூட்டில் வலியும் வீக்கமும் ஆரம்பிக்குப். இந்நோயின் ஆரம்பமே கனவேகமாக சுரத்தில் ஆரம்பிக்கும் இவருக்கு கையின் பூட்டில் இந்நோய் ஆரம்பிப்பதுண்டு. பின்னர் ஒவ்வொரு

கீல்களுக்கும் இந்த வீக்கமும் வலியும் பரவும். சிகிச்சைக்குப் பின் சுரம் சற்று குறைந்தால் போல் போக்கு காட்டி சுரம் கன வேகமாகும்போது புதிய புதிய மூட்டுக்களில் வீக்கமும் வலியும் பரவும் மூட்டுக்கள் சிறியவை, பெரியவை என்ற பாகுபாடின்றி இந்நோய் பரவும். கழுத்திலும்கூட இந்நோய் வீக்கத்துடனும் வலியுடனும் வரலாம். விரல்களின் சிறிய கணுக்களிலும் இந்நோய் பரவிவிடும்.

சில சமயங்களில் மூட்டுகள் இல்லாத துடைப்போன்ற தசைப்பிடிப்பிலும இவ்வீக்கம் ஏற்படும். வீக்கம் சிவந்த நிறத்துடன் இருப்பதோடு எரிச்சலும், விண், விண் என்ற தெரிப்பும் சும்மா இருக்கும் போதே பொறுக்க முடியாதபடி இருக்கும். நோயாளியின் பக்கத்தில் யாராவது நடந்தாலும் அந்த அதிர்ச்சி வீக்கமுள்ள மூட்டுக்களில் சம்மட்டிகொண்டு அடித்ததுபோல் வலி ஏற்படும். நோயாளியும் ஓ என்று அலறிவிடுவார். நோயாளி படுத்திருக்கும் கட்டிலை யாராவது தொட்டாலும், அசைத்தாலும் நோயாளி மிகுதியும் துன்ப படுவார்.

இந்நோயில் சுரமும் வீக்கமும், வலியும் போட்டி போட்டுக் கொண்டு புதிய இடங்களுக்குப் பரவும். வீக்கமுள்ள இடங்களில் ரத்த ஓட்டம் மிகுதியாகி தாபித மடைந்து, எரிச்சல், சிவப்பு நிறம், தொட்டால் சூடு, தொடமுடியாதவலி இவை ஏற்படும் - நோயாளியின் நாக்கு வெளுத்து பூத்திருக்கும் பசியிருக்கும் வாயில் கசப்பு ருசி தோன்றியிருக்கும்.

நோயுக்கு வசப்படும்படி சிகிச்சை செய்தலே ரக்தவாதத்தில் மிக முக்கியம் - மீறி வசப்படாவிட்டால் வீக்கமுள்ள இடம் கட்டிபோல் பழுத்து கீழ்க்கோர்த்து எரிச்சல் குறையும் ஆனல் சீழ்க்கட்டி குத்தல் வலி ஆரம்பிக்கும் கட்டி உடைந்தால் ரணம் ஆறுவது வெகு கஷ்டம் கட்டி உண்டாகி ரணம் ஏற்படாமல் சிகிச்சை செய்வதே ரொம்பவும் அவசியமானது.

சிகிச்சைகள் : ரக்த வாதத்தில் நெய்ப்புள்ள தைலங்கள் தண்மை குணமுள்ள மருந்துகளால் தயாரித்தவை சிறந்தவை சூடு என்பதே கூடாது. வேர்வைப் பிடித்தல் போன்ற சிகிச்சை இதில் கூடாது.

இனிப்பு சுவையுள்ள திரவியங்கள் முக்கியமாகவும் கசப்பு சுவையுள்ளவை அடுத்தபடியாக துவர்ப்பு சுவையுள்ளவை - ஆகியவைகள் உள்ளுக்குச் சாப்பிட தகுந்த ஔஷதங்களாம். தண்மை, சீதம் என்னும் வீர்யம் பெற்ற

மருந்துகள் இந்நோயைக் குணப்படுத்தக் கூடியவை. உதாரணமாக சீந்தில் கொடியைச் சொல்லலாம்.

திராக்ஷாதி கஷாயம் மிகவும் நல்லது. பிண்டதைலத்தை வீக்கமுள்ள இடங்வளில் தடவி வரலாம். இத்தைலத்தை ஒரு துணியில் நனைத்துச் சொட்டச் சொட்ட வீக்கமுள்ள இடத்தின் மேலே போட்டுவைத்து வரவேண்டியது. அடிக்கடி துணியை மாற்றி வர வேண்டியது மிகவும் அவசியமாகும்.

தாத்மிராதி லேபம் என்ற மருந்தை மேலே ¼ அங்குல கனத்தில் பற்றுகப் போட்டு வரவும் - பஞ்சதிக்த க்ருதம் உள்ளுக்குச் சாப்பிடலாம்.

வைத்தியன் உதவியில்லாமல் ரக்த வாதத்தை சிகிச்சை செய்து குணப்படுத்துவதென்பது இயலாத காரியம் தண்மையும், நெய்மையுமுள்ள மருந்துகளைத் தேர்ந்து எடுத்து சிகிச்சைகளை ஆரம்பிக்க வேண்டும் என்பதை மீண்டும் நினைவு வைத்துக்கொள்ளவேண்டும்.

குறிப்பு :—அடுத்த இதழில் சித்த முறைகளடங்கிய சிகிச்சைகளைப் பார்ப்போம்.

❋

பொங்கற் திருநாள் போற்றிடுவோம்

(ச. ஆறுமுகநாதன் S. M. P.

அகத்தியன் காப்பியன் தோன்றிடும் முன்
அருந்தமிழ் கழகம் அமைந்திடும் முன்
மிகுகடல் குமரியை மறைத்திடும் முன்
விண்ணுயர் இமயம் நிமிர்ந்திடும் முன்
முகிழ்ந்த நல்லறிவால் அரசியற்றி
முத்தமிழ் வளர்த்து உலகெல்லாம்
புகழ் ஒளி செய்து இலங்கு தமிழ்
பொங்கல் திருநாள் போற்றிடுவோம்.

ஒன்று பத்தாம் நூறுண் டன்றி
ஒது பல்லாயிரம் ஆண்டின் முன்
தொன் தமிழ் மக்கள் துவக்கி வைத்த
துலங்கும் பொங்கல் திருநாளை
இன்றும் மறவாப் புதுமை யுடன்
எழுங்கதிர் போற்றி பொங்கலிட்டு
நன்று வளங்கள் நிறைக வென
நல்லிசை பாடி மகிழ்ந்திடுவோம்

திருடொமினிக் ஜீவா அவர்களுக்கு
மருத்துவர்மன்றம் சார்பில் பாராட்டுக் கூட்டம்

28-11-61-ல் சென்னை பிராட்வே மருத்துவர் மன்ற அலுவலகத்தில் மன்றம் ஆசிரியர் M. A. இராம கிருஷ்ணன் அவர்கள் தலைமையில் சிறு கதை எழுத்தாளரான மருத்துவர் இலங்கை டொமினிக் ஜீவா அவர்கள் தண்ணீரும் கண்ணீரும் என்ற சிறு கதை எழுதியதற்கு இலங்கை அரசாங்கத்தாரால் 1000 ரூபாய் பரிசு பெற்றதை முன்னிட்டும் அவரது இந்திய விஜயத்தின்போது மருத்துவர் மன்றத்தின் சார்பில் பாராட்டுக் கூட்டம் நடைபெற்றது. பல பிரமுகர்கள் அவரைப் பாராட்டி M. முத்து, P. பலராமன், P. ஐம்புலிங்கம், மீ. கணபதி, மற்றும் பலர் பேசிய பின் தலைவர் அவரின் விடா முயற்சியையும் முடிதிருத்தும் தொழில் செய்துகொண்டே இலங்கையில் அரசாங்கமே பாராட்டும் வண்ணம் சிறுகதை எழுதி 1000 ரூபாய் பரிசு பெற்று மருத்துவ சமூகத்தையே உயர்த்தி விட்டார் என்பதையும் அவரின் குருகிய காலத்தில் இப்பெரும் பேரை பெற்ற திறமைக்கு சமூகத்தின் சார்பில் நன்றி செலுத்துவதாகவும் அவரின் கதை யாவும் தொழிலாளரை அடிப்படையாகக் கொண்டு நல்ல கருத்துகளுடன் பின்னப்பட்ட கற்பனை ஓவியம் என்றும் சாதி வெறிக்குச் சரியான சாட்டையடியும் பணத்தின் பெருமையால் எதையும செய்துவிடலாம் என்ற மமதை பிடித்தவர்களுக்கு மண்டையில் அடிப்பது போன்ற கருத்துக்கள் படிக்கப் படிக்க சுவை மிகுந்த வாழ்க்கை நாடகம் என்றும் அவசியம் நமது தொழில் வர்க்கமே படித்து உணர வேண்டுமென்றும் குறிப்பிட்டார் முடிவில் சிறுகதை ஆசிரியர் டொமினிக் ஜீவா அவர்கள் பாராட்டுதலுக்கு நன்றி தெரிவித்து கூறியதாவது நான் இளமையில் ஈழத்தின் பள்ளியில் படிக்கும்போது சாதியின் வெறிச் செயலுக்கு ஆளானேன். நான் நன்றாகப் படித்தால் கூட எனது தொழிலின் நிலையை எள்ளி நகையாடி கத்தி பிடிக்கும் கையிலே கல்வி சுவடிபிடிக்க வந்தாயா என்று என்னை ஆசிரியர்கள்கூட கேலியும் செய்த கின்டலும் பொருக்க முடியாத நான் கல்லூரியின் படியை மிதிக்க முடியாமல் அறை குறை படிப்போடு எனது தொழிலை மேற்கொண்டேன் ஆனல் நான் ஒரு தொழிலாளியாக இருந்தே எனது எண்ணங்களை கதைகள் மூலமாகப் பிரதி பலிக்கச் செய்ய வேண்டுமென்ற எண்ணத்தால் உந்தப்பட்டு பல பிரம பிரயத்தினத்திற்கிடையே சிறுகதை எழுதும் நிலமையை வளர்த்தேன் புகழ் தோன்றியும் கின்டல் நின்றபாடில்லை. உலுப் பிரயம் மாணவர் கூட்டம் நீ பேசக்கூடாது என்று

சாதி வெறியால் என்னைக் கல்லால் அடித்தார்கள் பேசி முடித்து தான் திருப்பினேன் எந்த கலாசாலை என்னை பேச அனுமதிக்கவில்லையோ அங்கு பேசினேன் என்னை தூற்றிய வரும் எனது வளர்ச்சியைத் தடுக்க முயற்சித்தவரும் என்னை கூட்டிட்டு அனுப்பினர் நான் அவர்களைக் கூப்பிட்டு அனுப்பி னேன் மனிதனை அழகு படுத்தும் தொழிலை இழிவாகக் கருதி ஒரு சமூகத்தையே ஒதுக்கவைத்து வாழவிரும்பும் மனித இனத்தை அண்டிப் பிழைக்க விரும்பவில்லை. அவர்களின் அறியாமை எண்ணங்களைத் தகர்த்தெரியவே விரும்பினேன். சென்னை சரஸ்வதி புத்தகாலயத்தில் தான் வெளியீட்டுவிழா நடைபெற்றது. பெரியவர்கள் எனது புத்தக வெளியீட்டு விழாவில் கலந்துகொள்ள விரும்பவில்லை. முதல் 200-ம் மூன்று மாதத்தில் 600 புத்தகமும் விற்றது. எனது கடைக்கு வந்தே புத்தகம் வாங்கினர்கள். எந்த கலாசாலை என்னை புறக் கணிந்ததோ அதே கலாசாலை தான் எனக்குப் பாராட்டுக் கூட்டமும் பரிசும் அளித்தது மேயர் என்னை இலங்கையின் பெருமையை உயர்த்திவிட்டதாக கூறினர். என்னை பாராட்ட கூப்பிட்டார்கள் வரமுடியாது என கூறிவிட்டேன். நிருபர் கள் பேட்டிகண்டார்கள் யார் என்று கேட்டார்கள். முடி திருத்தும் தொழிலாளி என்று தான் கூறினேன். என்னை கூப்பிடலாமா? வேண்டாமா? என்ற நிலையில் பொதுக் கூட்டத்திற்குப் கூப்பிட்டார்கள். நான் எனது தொழிலைப் பற்றி பேசியதற்கு பத்திரிகை மதிப்பு தந்தே பிரசுரித்தன

காலத்தால் சாகாத சாதி வெறியை ஒழிப்பதே எனது கதையின் லட்சியம் தண்ணீரும் கண்ணீரும் என்பவை. கல்லூரி மாணவர்கள் பெரியவர்கள் எனது அபிப்பிராயம் கேட்டனர் சாதி வெறியைக் கண்டித்துக் கூறினேன். இவை களை ஒழித்துக் கட்டும் வரை என் பேனா அயராது எனக்கூறி னேன். எதிர் காலத்தில் எனது இலக்கியம் சர்வ காலசாலை யில் ஒரு புத்தகமாகத் திகழவைப்பேன். எனது தொழில் தான் எனக்கு உயர்வு. என்னை மதிப்பது எனது சமூகத் தையே மதிப்பதாகக் கருதுவேன் நடித்து ஒளித்து கலைஞனாக இருக்க விரும்பவில்லை. எடுத்துக் காட்டாக நமது தேசத் தொண்டருள் ஒருவரும் நமது சமூகத்தவருமான S. S. விஸ்வனாதாஸ் நாடகத்துரையில் தேசப்பற்றை வளர்த்தவரும் உண்மைத் தொண்டை தமிழினம் சாதியின் அடிப்படையில் மறைத்துவிட்டது குறித்து துன்பப் படுகிறேன் ஆனால் மருத்துவர் மன்றம் பத்திரிகை ஆசிரியர் அதை மீண்டும் மக்கள் மனதில் அழியா விளக்காகத் தூண்டு வதற்கு நன்றி செலுத்துவதோடு என்னால் முடிந்த அளவு

பாடுபடவும் தயாராக உள்ளேன். நான் நமது சமூகத்தவரை சந்திக்கவே சென்னைக்கு வந்தேன். கல்வியிலும் சமூகபற்றிலும் பொருளாதார ரீதியிலும் நாம் மிக பின்தங்கியுள்ளோம். இந்த இக்கட்டான நிலையில் தைரியமாக மருத்துவர் மன்றம் வெளிவந்திருப்பதைப் பாராட்டுகிறேன். ஒரு விஸ்வநாத தாஸைப் பெற்ற மருத்துவர் சமூகம் பொதுமக்கள் விரும்பும் அளவு மருத்துவர் மன்றமும் வளரவேண்டும். நமது சமூகம் மெதுவான போக்குடையது இலங்கையிலும் இந்தியாவிலும் என்னைப்பற்றி பல கிளர்ச்சிகள் நினைவுறுத்தியது. ஆனால் நமது சமூகம் இவ்வளவு காலத்திற்குப் பின்தான் என்னை நினைக்க ஆரம்பித்துள்ளது. நாளை சமூகத்தையும் தொழிலையும் சொல்லித்தான் வாழ்கிறேன். ஒரு பத்திரிகை என்னை இலக்கியப் பகுதியில் சேர்த்துக் கொள்வதாகவும் எனது முடிதிருத்தும் தொழிலை லிட்டுவிடவேண்டும் என்றும் கூறியது. நான் மறுத்து என்னை எனது சமூகத்திலிருந்து பிரிக்கும் சூட்சிக்கு ஆளாக்க முடியாது என்றும், என்னை மனிதனுக்கியது எனது தொழிலே என்றும் நோபல் பரிசே கிடைப்பதாயினும் எனது தொழிலை விட்டுவிலகமாட்டேன் என்றும் கூறினேன். ஆதலால் நமது சமூக் கட்டுப்பாட்டை வளர்க்கப் பாடுபடும் மருத்துவர் மன்றத்தை நாம் ஒவ்வொருவரும் போற்றி வளர்க்க வேண்டும். வாங்க மறுக்கும் நமது இன சகோதரர்கள் அறியாமையை விளக்கிக் கூறி வாங்கச் செய்ய வேண்டும். பணத்திற்காக பத்திரிகை வளரக்கூடாது சமூகம் உயரும் நோக்கமே பத்திரிகை நோச்கமாக இருக்கவேண்டும்.

நான் இம்மன்றத்தை வளர்க்க என்னால் முடிந்த எல்லா உதவியையும் செய்வேன் தொடர்ந்து கதை எழுதுவேன் மன்றத்தை வளர்ப்பேன் எனக்கூறி என்னைப் பாரட்டிய மருத்துவர் மன்ற நிர்வாகிகள் அனைவருக்கும் எனது நன்றியைத் தெரிவித்துக்கொண்டு எனக்கு அவர்கள் அளித்த வரவேற்பும் விருந்து பசாரமும் நமது சமூக அபிமானத்தின் சின்னமாகக் கருதி எனது நன்றி வணக்கத்துடன் இது சிற்றுரையை இனிது முடிக்கின்றேன் எனக் கூறினர். அதன் பின் சென்னை பழைய செயில் வீதியிலுள்ள தமிழ் நாடு உணவு விடுதியில் விருந்துபசாரம் நடைபெற்றது. என செயலாளர் P. பலராமன் எழுதுகிறார். M. A. இராமகிருஷ்ணன், M. சமால்தீன், P. பலராமன், M. முத்து, L. சீனிவாசன், P. M. ஆறுமுகம், N. பக்கிரிசாமி, P. நடேசன், E. துரைராஜ், மீ. கணபதி, முத்தப்பன், ஜம்புலிங்கம் கலந்துகொண்டவர்கள்.

பொதுக்கூட்டம்

முடி அலங்கரிப்போர் சங்க ஆண்டுவிழா

✻

28-11-61-ல் சென்னை புதுப்பேட்டை ராஜபவனம் சத்திரத்தில் சங்கத்தலைவர் சம்பத்பாய் அவர்கள் தலைமையில் சங்க ஆண்டுவிழா நடைபெற்றது. மராமத்து இலாகா அமைச்சர் B. கக்கன் அவர்கள் ஆரம்பித்து வைத்தார்கள். மருத்துவர் மன்றம் ஆசிரியர் M. A. இராமகிருஷ்ணன் அவர்கள் மருத்துவர்கள் நிலையைப்பற்றி அமைச்சர் முன்னிலையில் பேசியதாவது :

மருத்துவர்கள் பல தொழிலில் ஈடுபட்டிருப்பினும் சித்த வைத்தியத்திலும் முடிதிருத்தும் தொழிலிலும் லட்சக் கணக்கானவர்கள் ஈடுபட்டுள்ளனர். மருத்துவர் சங்கம் பல ஆண்டுகளாக சமூகத்தொழிலாளர் குறைபாடுகளை அறிவித்து வந்துள்ளது. காமராஜர் ஆட்சியில்தான் சிறிது சலுகை கிடைத்துள்ளது. ஆனாலும் இருபது லட்சம் மருத்துவர்கள் வாழும் தமிழ்நாட்டில் சர்க்கார் அலுவலகங்கள் மக்கள் சபை பஞ்சாயத்து சபை போன்ற இடங்களில் அவர்களுக்கு இடமில்லை. பொருளாதாரத்திலும் தொழில் துறையிலும் முன்னேற்றமில்லை. சமீபத்தில் சர்க்கார் கடன் உதவி செய்வதாகப் பத்திரிகையில் பார்த்தேன். 53 ரூபாய் கடன் உதவி செய்வதால் அதைவைத்து எந்தத் தொழிலை செய்ய முடியும் முடிதிருத்தும் கருவிகள் வாங்குவதென்றால் ஒரு மிஷின் விலையே 50 ரூபாய் ஆகிறது. பாக்கி சாமான்களுக்கு என்ன செய்வது இது எங்க வீட்டுக்காரரும் ஆபீசுக்குப் போகிறார் என்பதுபோல மருத்துவர்கள் தொழில்களுக்கும் கடன் உதவி செய்தோம் என்று சொல்லிக்கொள்ளலாமே தவிர பிரயோசனப்படாத உதவியாகும். ஏறக்குறைய எங்கள் தொழில் காலத்திற் கேற்ற முறையில் முன்னேற வேண்டுமானால் மூவாயிரத்திலிருந்து ஐந்தாயிரம் வரை சர்க்கார் நீண்டநாள் தவணையில் கடன் உதவிசெய்ய வேண்டும் பொதுத் துறைகளில் தனி இடம் தேர்தல் இன்றி சில காலத்திற்குஒதுக்கித் தரவேண்டும் இதைஎங்கள் போன்ற ஒதுக்கப்பட்டு நசுக்கப்பட்டு வந்த சமூகத்திலிருந்து இன்று ஆட்சித் துரைக்கு வந்துள்ள அமைச்சர்கள் கனம் K. காமராஜ் B. கக்கன் போன்றவர் காலத்தில் தான் எங்கள் கோரிக்கை களை நிறை வேற்ற முடியும் ஆதலால் அமைச்சர் அவர்கள்

ஆவன செய்ய வேண்டுமென எதிர் பார்க்கிறோம் எனக் கூறினர். அமைச்சர் அவர்கள் வரவேற்புக்கு நன்றி தெரி வித்துப் பேசியதாவது.

மருத்துவர்களின் துன்பத்தை நான் அறிவேன் நீங்கள் முக்கியமாக பற்பல பெயர்களில் சங்கம் இயங்குவதை ஒழித்து ஒன்றுபட்டு வாழ முயற்சிக்க வேண்டும். உங்கள் ஒற்றுமையால் தான் உங்கள் கோரிக்கை நிறைவேறும் தீயசக்திக்குப் பணியாதீர்கள் நான் எங்கிருந்தாலும் அரி ஜனன்தான். நான் ஒரு ஏழை ஏழைகளுக்குப் பாடுபடவே என்னை நியமித்துள்ளார்கள் என்னாலான எல்லா உதவி களையும் செய்வேன் நீங்கள் சிக்கனமாக வாழ கற்றுக் கொள்ளவேண்டும். அரசாங்கம் பணம் தருவதை பரிட் சார்த்தமாகப் பார்த்தோம். அதிகம் கொடுக்கத்தான் வேண் டும். போகப் போகத்தான் செய்யவேண்டும். கூட்டுறவு சொசைபிட்டி ஏற்படுத்துங்கள். அப்போதுதான் பெரிய செலவை செய்யமுடியும் கூட்டுறவு இயக்கத்தைப் பலபடுத்த வேண்டும். நீங்கள் என்னிடம் வந்தால் கூட்டுறவை ஏற்பாடு செய்ய உதவி செய்கிறேன். கடன் வாங்காமல் எந்த லட்சி யமும் நிறை வேற முடியாது. கடன் வாங்குதல் தவறு அல்ல. நாட்டையோ வீட்டையோ சுபிட்சம் செய்ய கடன் வாங்குவது தவறல்ல மருத்துவர் சங்கம் நல்ல முறையில் வளரவேண்டும். விஸ்வநாத தாஸ் எங்கள் ஊர்காரர். நாடகத் தின் மூலம் தேச விடுதலைக்காகப் பாடுபட்டார். நீங்கள் பல பிரிவின்றி வேலை செய்தால் உங்கள் கோரிக்கையை கவனிக் கிறேன் எனக் கூறி முடித்தார்.

சிறுகதை எழுத்தாளரும் அண்மையில் கண்ணீரும் தண்ணீரும் என்ற சிறுகதைத் தொகுதிக்கு இலங்கை சர்க்காரால் 1000 ரூபாய் பரிசு பெற்றவருமான மருத்துவர் டொமினிக் ஜீவா அவர்கள் அடுத்த இதழிலிருந்து தொடர் கதை எழுதுவார்கள். சுவை நிறைந்ததும் படிக்கப் படிக்கத் திகட்டாததுமான அவரின் தொடர் கதையை எதிர்பாருங்கள்!

சரித்திரத்தில் கதா நாயகர்கள்

முஸ்லீம் இராஜபகதூர்கள்

மனித வாழ்க்கையில் பல வகையிலும் முன்னேற்றம் காணத் துடிக்கும் இளம் வாலிபர்கள் வாழ்க்கையில் பள்ளம் மேடுகளைக் கண்டு அஞ்சுவது மரபே. வெற்றி தோல்விக்கு இடையூறாக விளங்கும் புரியாத வாழ்க்கைப் பிரச்சனைகள் புரிந்து கொள்வதற்கும் இடர்களை நீக்கி முன்னேறுவதற்கும் மற்றொருவர் அனுபவச் செயல்கள் இருவகையிலும் வழி வகுத்துத் தருகிறது. தெளிவும் பண்பும் உள்ள அறிவு படைத்த சமுதாய சிற்பிகள் தங்கள் வாழ்க்கையை சிறப் பிக்க இறந்த கால சரித்திர அனுபவங்கள் ஓரளவும் உதவி யாகும் எனவே இப்பகுதியைத் தொடர்ந்து எழுத விரும்பு கிறோம்.

பாரத பூமியில் மூகலாயர்கள் காலடி வைத்தது முதல் அவர்கள் அரசாட்சி முடியும் வரை சிம்மாசனம் ஏறியவர் களில் மிகச்சிரேஷ்டமானவர்களையே இங்கு குறிப்பிடுகிறோம்.

முகம்மது கஜ்னி

மூகலாயர்கள் பாரத நாட்டில் மக்களுக்கும், கலைகளுக் கும், திருக்கோவில்களுக்கும் அழிவு தேடி இருந்தாலும் அவர்களிடத்தில் வளர்ந்த நல்ல குணங்களை அன்னியர் அனை வரும் ஏற்றுக்கொள்ள வேண்டியது அவசியமாகிறது. அந்த வகையில் மக்களை மக்கள் ஏமாற்றிப் பிழைத்த மயவஞ்சகக் கூட்டங்களின் செயலை வெட்ட வெளியாக்கிய கஜ்னியை நாம் போற்றாமல் இருக்க முடியாது.

முகம்மது கஜ்னி ஆரியர்களையும் அவர்கள் திருக் கோவில்களையும் அழித்த அவனது படை யெடுப்புகளில் சோமநாதர் கோயிலை பாழாக்கிய வரலாறுதான் பரதநாட் டின் முன்னனியில் நிற்கும் அடாத செயல் என்போம். அவைகளில் மிக முக்கியமான பகுதியை எடுத்துக்கூறும் அராபிய கவியாகிய கஜ்பினி கூறியதைப் படியுங்கள். முகம்மது கஜ்னி சோமநாத புரத்தில் படையெடுத்தபோது அங்குள்ள ஆலயத்தில் விளங்காத புதிராகநின்ற கற்பகிர கத்தைக் கவனித்து ஆச்சரியப்பட்டான். அங்கு யாதொரு பற்றும் (தொடர்பும்) இல்லாமல் அந்தரமாய் ஒரு விக்கிரகம் நின்றதைக் கண்டான். அந்த அரையின் உட்புறம் நல்ல தேக்கம் பலகையினல் ஆக்கப்பட்டு பலகையை ஈயத்தினல்

மறைக்கப்பட்டிருந்தது. அந்த கோவிலின் விமானத்திலிருந்து தொங்கவிடப்பட்டிருந்த தங்கச் சங்கிலியால் காணப்பட்ட மணியை அடித்தவுடன் அநேக பிராமணர்கள் பூசைக்குச் சேர்ந்தனராம். அக்கோவிலிலுல் ஆயிரம் பிராமணர்களுக்கு (பார்ப்பனர்) ஜீவனம் நடைபெற்று வந்தாம். அந்த அந்தரத்தில் நிற்கும் ஆச்சரியமான விக்கிரகத்தை பார்க்கப் பல யாத்திரைக் காரர்களும் காணிக்கைகளுடன் வந்தார்கள். அந்த விக்கிரகத்தினருகில் வாசனை தைலமிட்ட விளக்கு எரிந்து கொண்டிருந்தாம்.

இவ்விஷயங்களைப் பார்த்த கஜ்னி யாதொரு ஆதாரமுமின்றி அந்தரத்தில் நிற்கும் இந்த விக்கிரகத்தை என்ன வென்று நினைக்கிறீர்கள் என வினவக் கேட்ட சிலர் நம் கண்ணுக்குப் புலப்படாத ஏதோ ஆதாரமிருப்பதாக சந்தேகப்பட்டனர். மற்றும் சிலர் விமானம் காந்தக் கல்லினுல் அமைக்கப்பட்டிருக்கிறது. இந்த விக்கிரகம் இரும்பினுல் அமைக்கப்பட்டு இருக்கிறது என்றும் சந்தேகித்தனர். இதனைக் கேட்ட கஜ்னிகோவில் விமானத்தைப் பிரிக்குமாறு கட்டளையிட்டான் கஜ்னி இரண்டு கற்கள் நீக்கப்பட்டவுடன் விக்கிரகம் சாய்ந்து கீழே விழுந்தது. இந்நிகழ்ச்சியால் நாம் தெரிந்து கொள்ள வேண்டியது முகம்மது கஜ்னியின் சாதுரியம் ஒரு பக்கத்திலிருப்பினும் உலோகப் பொருள் சாஸ்திர ஞானமும், புத்தியும், யுக்தியும் வெளிப்படுகின்றன. ஜனங்களை ஏமாற்ற இம் மாதிரி யுக்தி, தந்திரம், ஏமாற்றுதல் இவைகளை எடுத்துக்கொண்டால் ஆரியனின் (பாப்பனரின்) வஞ்சகப் புத்தி நினைக்கப்படலாம். ஆனல் இயற்கையில் காணப்படும் விசேஷங்களை யாவும் தெய்வத்தின் வல்லமை யாதலால் அவைகள் பூஜிக்கப்பட வேண்டும் என்கிற கொள்கையைக் கொண்டவர்கள் ஆரியர்கள் என்பதை நாம் மறக்கக்கூடாது. அந்த அரசன் கல்வியில் மிக்க அபிமான முள்ளவன். அவனது காலத்தில் கஜ்னி தர்பார், பாரசீக பாஷையில் கற்றறிந்தவர்களுக்குச் சொந்தமாய் விளங்கியது. அவன் நீக்கிய பொருள்களுள் பெரும் பான்மை கல்விமான்களுக்கு அளிக்கப்பட்டது.

மூக்கியமாய் அல்பைரூனியையும் பிர்தௌஸியையும் குறிப்பிடலாம். அல்பைரூனி ஒரு பெரிய வான சாஸ்திரிகர். அவருடைய நிஷ்பக்ஷபாதமான சரித்திர ஆராய்ச்சியினர் பற்றி அன்றைய உலகம் போற்றியது. பிர்தௌஸி என்பவர் ஷாஹ்நாமா என்கிற இராஜ விருத்தாந்தத்தை இயற்றி இருக்கின்றார். (வளரும்)

வாழ்க! கொடுமை

[M. ராஜகோபால்]

கொடுமை வாழ்க்! கொடுமை வளர்க! கோலோச்சும் குணைளர்கள் நாட்டுமக்களுக்கு இழைத்துவரும் அநீதி - அள்ளித்தருகின்ற தொல்லை இவைகளைப் பார்க்கின்ற நேரத்தில் தான், கொடுமை வாழ்ந்தால் என்ன; வளர்ந்தால் என்ன - என்ற ஆசை எழும்புகிறது, ஏமாற்றத்தால் அதிர்ந்துப்போய்; ஆனலும் வாழத்தான் வேண்டுமென்று துடிக்கின்ற நேரத்தில் இந்தக் கொடுமை வாழ்ந்தால்தான் என்ன என்ற எண்ணம் தான் மேலிடுகிறது!

ஏன்? கொடுமை சாதித்ததை வேறு எந்த சக்தியும் சாதித்ததாகச் சரித்திரம் இல்லை! இன்று நல்ல நிலைபெற்று விட்டதாகச் சொல்லப்படுகிற நாடுகளின், வரலாறு கற்பிக்கின்ற பாடமும் அதுதான்!

கொடுமை கூத்தாடிய ஜாரின் ஆட்சி இல்லை யென்றால் ரஷ்ய நாட்டில் லெனின் இல்லை; அவன் தோற்றுவித்த புரட்சி இல்லை; இன்றைய சமதர்மக் குடியரசு இல்லை.

"நாட்டு மக்கள் என் காலடியில் மிதிபடும் புழுக்கள் - அவர்களின் உழைப்பு என் அரண்மனையின் அஸ்திவாரம்" என்று கொக்கரித்த லூயி மன்னன் இல்லையென்றால், பிரான்சிலே புரட்சி தோன்றியிருக்க முடியாது. 'பாஸ்டிலி' பொடியாகி இருக்கமுடியாது! பொடி பொடியாகிவிட்டதே எங்கள் வாழ்வு என்று புலம்பித் தவித்த அந்நாட்டுக் கோழைகளின் கரங்களிலே 'ராட்சச' ஆட்சியின் கொடுக் கறுக்கும் கறுக்கரிவாள் ஏறி இருக்க முடியாது!

கொள்ளை யடித்துக் கொழுக்கும் வெள்ளைப் பரங்கியரை விரட்டி யடிப்போம்; கொடுமையின் சிகரத்திலே ஏறி விட்ட கோலேந்திகளைத் துரத்தியடிப்போம் - என்று இந்நாட்டில் விடுதலை முழக்கம் வீறுகொண்டு எழுவதற்கு பகவத் சிங்கின் பரிதாப மரணமும், செக்கிழுத்த சிதம்பரனார்; திருப்பூர் குமரன் மருத்துவர் S. S. விஸ்வநாத தாஸ் போன்ற இன்னும் பலரின் அவலச் சாவுகள் தேவைப்பட்டன!

ஆகவேதான் பட்டினிப்படை பட்டாள நடைபோட வேண்டும். என்று சிந்திக்கிறான் இந்நாட்டுப்பஞ்சை.

சுதந்திரம் கிடைக்கட்டும், தேனும் பாலும் கலந்த பெரு நதிபாயும் - என்று சொன்னார்கள். தேனும் பாலுமல்ல; தேம்பியழும் ஏழையின் இரத்தமும் வியர்வையும் ஒன்று கலந்த நீரோட்டம் தான் அணை உடைத்துப் பாய்ந்தது.

ஆனந்தப் பள்ளு பாடினார்கள் - விரைவிலேயே அது அவலகீதமாக - அபயக் குரலாக மாறிவிட்டது.

பண முதலைகளின் பல் பிடுங்கப்படும் என்றார்கள்; அவர் களுக்குப் பக்கபலமாக இருக்கின்ற ஆட்சியினரைத்தான் இன்று காணமுடிகிறது!

கள்ளமார்க்கெட் காரர்களைக் கழுவிலேற்றுவோம் என்று சண்ட மாருதமென முழங்கினார்கள்; அவர்களைக் கண்டுபிடிக்கவே மார்க்க மற்றிருக்கின்றனர்!

அதைப் போலவே ஜாதியாவது; பேதமாவது, இப்படி வேறுபாடு காண்பதாகக் கூறுவது அறியாமை! என்று வாய்ப்பறை அடிப்பார்கள், ஆலல் செயலோ.....இப்படி யும் நடக்குமா என்ற கொடுமையாகத்தான் இருக்கும்.

மருத்துவர் இனத்திற்கு வேண்டிய, மூடிதிருத்தும் கருவி கள், அரசாங்கக் கடனுதவி, ஜில்லாக்கள்தோறும் சங்கங்கள் முதலியன காங்கிரசைச் சேர்ந்த (மருத்துவர்) தலைவர்கள் கேட்ட நேரத்தில், எல்லாம் கவனிப்பதாகக்கூறி அரசு அலட்சியம் செய்தே வருகிறது. - 'குறுகிய புத்தியிலே குட்டையைக் குழப்பாதீர்கள்' என்று பெரிய மனதுடன் அறிவுரை சொன்னார்கள். மற்றும் மருத்துவ மக்களுக்கு உத்தியோகத்துறையில் எல்லா வசதியும் அளிக்க வேண்டு மென்று ஆட்சியாளர்கள் கூறுகின்ற இந்நாளில்! ஒரு சிலர் (மருத்துவ இனத்தைச் சேர்ந்த) படித்தவர்கள் வேலை கேட் டால் - அரசாங்க ஆபீஸ்களில் வேலை செய்யும் குள்ளநரிக் கூட்டங்கள்! அந்த ஊரில் பார்ப்பனர்கள் வாழ்கின்றனர், முதலியார்கள் இருக்கின்றனர் - அவ்விடம் நீ சென்று உத்தியோகம் செய்தால் அவர்கள் பொறுமைப் படுவார்கள் என்று ஆபீசில் வேலை செய்யும் அதிகாரிகளே ஜாடையாக தட்டிக் கழிக்கின்றனர். காரணம் கேட்டால் வேறு இடத் தில் பார்க்கலாம் என்று நாள் தள்ளி வாழ்நாளிலே வேலை இல்லாமல் செய்கின்றனர். இதனால் வஞ்சிக்கப்பட்டு வறுமை

யில் வாடி-கொடுமையில் வாழத்தான் வேண்டுமா என சிந்திக் கிறான்.

கிராமங்களில் புறம்போக்கு இடத்தில் (மருத்துவ இனத் தவன்) வீடு கட்டினால் உடன் பிய்த்து எரியப்படுகிறது. மற்றும் மருத்துவ ஜாதியானுக்கு நடு மனையில் இருக்கக் கூடாதாம் - புறம்போக்கு நிலத்தில் பயிரிடக் கூடாதாம் - நல்லவேட்டி கட்டக்கூடாதாம் - காலில் செருப்பு போடக் கூடாதாம் - இது போன்றவை கிராம பண முதலைகளின் சட்டதிட்டம். இதுபற்றி ஆட்சியாளருக்கோ - மேல் அதி காரிக்கோ தெரியப்படுத்த விரும்பினால் - இதற்குள் என்ன செய்வார்களோ என்ற பயத்தினால் - மேலும் அடங்க - அவர் கள் கைப்பிடியில் சிக்கித் தவிக்கின்றார்.

நகரங்களில் மருத்துவர்களுக்கு நகரசபை மூலம் என் னமோ சாதித்துவிட்டாதகவும் - லைசென்ஸ் ரத்து செய்ததாக வும், ராயபுரத்தில் வசிக்கும் ஒரு தோழர் கூறினார். அப்படி கூறுவது மிகவும் தவறு நகரத்தில் - அதுவும் சென்னையில் மருத்துவன் குடியிருக்க வீடு கேட்டால் முதலில், நீ என்ன ஜாதி. என்ன தொழில் செய்கிறாய் என்று கேட்கிறார்கள்- மருத்துவன் (Barber) என்றதும், வீடு கிடையாது என்று சொல்லுகிறார்கள். ஆகவே நகரத்திலும் இதுபோன்ற அநேக கொடுமைகள் ஏற்படுகின்றன.

ஆகவே இவ்வாறு பொது மக்களுக்கு ஏற்படும் குறை களை ஆட்சியாளர்கள் கவனித்து மருத்துவ மக்களுக்குப் புதிய வீடுகள் கட்ட வசதியளித்து பிற்பட்ட வகுப்பினரை முன் னேற்றத்திற்கு கொண்டுவர காங்கிரஸ் ஆட்சி பணிபுரியும் என்று நம்புகிறேன்.

மருத்துவர்களே நீங்கள் சிந்திப்பதுண்டா ?

நமது குழந்தைகள் படிப்பதைக்கூட நிறுத்திவிட்டு பரம் பரைத் தொழிலைச் செய் என்று மீசையை முறுக்குகிறார்களே நீங்கள் அறிவீர்களா ? கிராமங்களிலே பொதுக் காரியங்கள் ஆலயங்கள் பஞ்சாயத்து போர்டுகள் இவைகளிலே நம்மவர் கள் உரிமை பெறமுடியுமா ? தப்பித்தவறி சொந்த முயற்சி யில் எங்கோ ஓரிடத்தில் வந்தாலும் வஞ்சகமாகவோ அதிகார முறையிலோ வெளியேற்றப்படுகிறோம். என்பதை நீங்கள் அறிவீர்களா? இத்தனையும் இன்னும் எத்தனையோ துன்பங்க ளையும் அனுபவிக்க முடியாதவன் வெளியேறியும் முடிந்தவன் அனுபவித்துக்கொண்டு புதிய துன்பங்களுக்கு எதிர்பார்த்துக் கொண்டிருக்கிறானே. மனித சமூக நியாயி அவனை அரசாங்க மாவது கவனித்து ஆவன செய்கிறதா; நம்மக்கள் வாழ்க்கை உயர நமது நாட்டிலே மூன்றாவது திட்டமும் வந்துவிட்டதே இதுவரை மனித இனத்திற்குத் தனது வாழ்நாள் பூராவும் பலன் கருதாத பணி செய்து வந்தோமே நமக்காக கிராமத் திலே செய்த உதவி என்ன ? நமக்கோ நம் தொழிலுக்கோ பற்றாக் குறையான கூலி குறைவிற்கோ மண் குடிசை நல் குடிசையாக மற்றவர்களுக்கு செய்து வைப்பது போல நம்ம வருக்கு செய்திருக்கிறார்களா ? அல்லது கட்டித் தருவதாகச் சொல்லி இருக்கிறார்களா. இல்லை இந்தத் தொழிலுக்கு உரிய நமது சமூகத்தவர் எல்லாவகையிலும் புறக்கணிக்கப்படு கிறார்கள்.

இவர்கள் வாழ்க்கையைச் சொல்லச்சொல்ல சோகரசமே தவிர சொகுசான நிலையல்ல. கிராமங்களிலே நம்மவர்கள் சாதிவெறியால் துன்பப்பட்ட எத்தனையோ சிறு சம்பவங்களை நீங்கள் இம்மன்றத்தில் தொடர்ந்து வாசிக்கப்போகிறீர்கள். இவர்களுக்கு ஏற்படும் அநீதிகளை அங்குள்ள கோயில்களில் சொல்லமுடியுமே தவிர போலீஸ் நிலையங்களில் சொல்ல முடியாது. கடவுளிடத்தில் காதும் காதும் வைத்தமாதிரி சொல்லிவிடலாம். அரசு இடத்திலே அப்படிச் சொல்ல

முடியுமா? சாட்சி அடிபட்டுப் பிளந்த காயங்கள் ரத்தத்தைத் துடைத்த துணி, அதற்கு ஒரு சாட்சி. உன்னுடைய துணி தானு? என்பதற்கு இத்தனையும் இருந்தாலன்றி போலீஸ் நிலையத்திற்குப் போக முடியாது. ஊருக்கு ஒரு தொழிலாளி அவன் மனைவி இந்த இருவரையும் அடிக்கிறார்கள். இவர்களுக்கு சாட்சி யார் சொல்வார்கள். சாட்சி இல்லாமல் போலீஸ்தான் என்ன செய்யமுடியும். அதையும் மீறி போலீஸ் ஸ்டேஷனுக்குப் போனால் திரும்பக் குடி இருக்க முடியுமா? இந்த நிலையை எண்ணி காலத்தால் மனமாறியவர்கள் வெளியேறி நகரங்களில் குடியேறியவர்கள் அனந்தம். வள்ளுவர் வாக்கைத் தனக்குத் தெரியாமலே திருக்குறள் படிக்காமலே பழக்கத்தில் கொண்டுவந்த பழங்குடி மக்கள் அல்லவா? நம்மக்கள். (அகழ்வாரைத் தாங்கும் நிலம்போல தன்னை இகழ்வாரைத் தாங்குதலே தலையாய அறம்) என்பதை முழுக்க முழுக்க கடைபிடிப்பவர் இந்த பரந்த உலகத்திலேயே இவர்கள்தான் என்றால் ஆச்சரியப்பட மாட்டீர்கள். அப்படியானால் நம்மவர்கள் எவ்வளவோ பண்பட்டவர்கள் என்று தோணும் அல்லவா? அவசரப்பட்டு நிதானிக்கக் கூடாது. தாயின் கருவிலிருந்து வந்ததிலிருந்து குழந்தை பருவமுதல் அதிகாரத்திலே வளரவில்லை. உயர்ந்தவர் தாழ்ந்தவர் என மன்பான்மையைக் காட்டி, தன் சகா குழந்தைகளோடு பழகும்போதும் அந்த உயர்ந்த இனத்தவருக்கு எல்லாவகையிலும் அடங்கி நடக்கவேண்டும் என்ற கருத்துக்களையே பொதுவாக நமது தமிழகத்தில் தாழ்த்தப்பட்ட பட்டியலிலுள்ள அனைவரும் நடந்துகொள்ள வேண்டும் என்று தாயே தனது குழந்தைக்குப் போதிக்கவேண்டிய சூழ்நிலையில் வாழ்ந்துவந்தார்கள். அவை இரத்தத்திலும் கலக்கப்பட்டவை யாதலால் கோழைத்தனம் நமது பழக்க வழக்கங்களில் ஒன்றாக மாறிவிட்டது. அந்தப் பொறுமையைத் தனது சமூகத்தினரிடம் காட்டுவதில்லை யென்பதை நீங்களே அறிவீர்கள். இந்த நிலையில் நம்மவர் வாழ்கிறார்களே அதற்கு என்ன செய்வது என்பதை யோசித்ததுண்டா?

திண்டிவனம் வட்டத்தில் கொந்தாமூர் கிராமத்தில் மருத்துவ வகுப்பைச் சார்ந்த ஒரு பெரியம்மை தனது புதல்வனின் மூடி திருத்தும் தொழிலின் வருவாய் போதாமல் நெல்வாங்கி குத்தி அரிசிவிற்று பிழைத்துவந்தனர். ஒருநாள் அவ்வூர் உயர்சாதி வகுப்பினர் ஒருவர் அரிசி வாங்கிக்கொண்டு கடன் சொன்னார். அன்றுடம் முதல்போட்டு நெல் வாங்குவதால்

கடன் கொடுத்தால் நாளை நெல்வாங்க பணமிருக்காது. ஆதலால் கடன் கேட்காதீர்கள் என அன்புடன் கூறினர். அதைக் கேட்டு வெகுண்டெழுந்த வாலிபர் கிழவியை மனம்போன போக்காய் அடித்து முகமெல்லாம் வீங்கச்செய்து அரிசியை எடுத்துக்கொண்டு போய்விட்டார். வேலை முடிந்து வீட்டுக்கு வந்த முடிதிருத்தும் தொழிலாளி தாயின் அலங்கோலத்தைக் கண்டு மனம் வெதும்பி அடித்தவர் வீட்டுக்கு சென்று கேட்டதற்கு அம்பட்ட பையனுக்கு வீடேறிவந்து கேட்கும் துணிவு வந்ததா என்று அங்கிருந்தோர் அனைவரும் சேர்ந்து ஆளுக்கொன்றாக அடித்து ஓட ஓட விரட்டினர்கள். யாரும் துணையில்லாத ஊருக்கு ஒருவனை அம்மருத்துவ வாலிபன் உயிர் பிழைத்தால் போதுமென்று தனது பெற்ற தாயையும் மறந்து கழனி வெளிகளில் விழுந்து மனோவேகத்தினும் துரிதமாய் ஓடி மறைந்தான். தனது ஊரின் எல்லையைத் தாண்டிதான் திரும்பிப்பார்க்க நேர்ந்தது. களைப்பும் சோர்வும் பயமென்ற திகில் வென்றுவிட்டதால் திண்டிவனம் வந்து சேர்ந்தார். அங்குள்ள தெரிந்த நண்பர்களிடம் தனது முதுகில் பட்டை பட்டையாக உறிக்கப்பட்டு ரத்தம் கசிவு கண்ட புண்ணைக் காட்டிக் கதறினர். தேர்தல் கூறுவாரில்லை போலீஸ் நிலையத்திற்குப் போனால் சாட்சி வேண்டுமல்லவா? அதுவுமில்லை; விதியை நினைந்து வீதியின் ஓரத்திலே அன்றிரவு வலியும் வேதனையும் உணவாகப் புசித்து வயிற்றை பட்டினிபோட்டு நித்திரையில் ஆழ்ந்தார்.

பொழுது விடிந்தது கையில் காலணகூடக் கிடையாது. இரயிலடியை நோக்கி நடந்தார். நமது அன்பர்கள் கடைகள் முன்னால் போய் நின்றார். யாரும் கவனிப்பதாகத் தெரியவில்லை. தாயாருக்கு என்ன கதியோ என நினைக்கும்போது உள்ளம் பயத்தால் நின்று ஓடிற்று. கோழைத் தனத்தால் பல தடவை இறந்து பிழைத்த அவர் மீண்டும் நகர்ந்தார். அங்கே ஒரு வீட்டின் மேன்மாடியில் தமிழ்நாடு மருத்துவர் மத்திய சங்கம் கிளை திண்டிவனம் மருத்துவர் சங்கம் என்று எழுதியிருந்தது. நம்பிக்கை யிழந்துகொண்டிருந்தவருக்குப் புதிய பலம் நரம்புகள் வழியே பிரவேசித்தது. மாடிப்படியை ஏறவும் வலிவுபெற்றார். அங்கே மருத்துவர் சங்க நிர்வாகியிலொருவரான தோழர் சீ. சபாபதியைக் கண்டார். செய்திகளை விளக்கினர்; விவரம் அறிந்த நிர்வாகி முதலில் உடல் வேதனைக்கு மருந்தூட்டி உள்ளத்திற்கு தைரியமூட்டி வயிறார சிற்றுண்டி அளித்து சோர்வு நீங்கும்வரை அயர்ந்து தூங்கவும் வசதி அளித்தார். மீண்டும் மாலை மருத்துவர் சங்க

நிர்வாகிகள் கூடி ஒற்றுமைப்படுத்தி வைப்பதே சரிஎன்ற முடிவுடன் நமது கதாநாயகனை அழைத்துக்கொண்டு கொந்த மூர் கிராமத்திற்குச் சென்றார்கள். அங்கு பெருந்தன்மை வாய்ந்த பெரியோர்களை அணுகி செய்தியை விவரித்து தவறை உணர்த்தினர்கள். அந்தப் பெருந்தகையாளர் விரோதியான அவரைக் கூப்பிட்டு பலர் முன்னிலையில் விசாரித்துக் கிழவியைக் கூப்பிட்டு விசாரித்தனர். அடியிற்கண்ட வாக்குமூலங்களை விளக்கினர்.

•

தான் அரிசிவிற்று பிழைத்து வந்ததையும் கடன் கொடுத்தால் என்னால் வியாபாரம் சமாளிக்கமுடியாது எனக் கூறியதற்கு அடித்து முகத்தைத் தரையில் தேய்த்ததையும் கூறிவிட்டு இதோ நிற்கும் இவர் என்மகனை அடித்துத் துரத்திவிட்டு நான் கடன் கொடுக்காதற்கு அபராதம் எட்டணையை வாங்கிக்கொண்டு இனி இவ்வூரில் நீங்கள் இருக்கக்கூடாது என்றும் வேலை செய்யக்கூடாது என்றும் கூறி விட்டனர் என்று கூறிய கிழவி விக்கி விக்கி அழுதாள். அங்கு நிரபராதிக்கு நேர்மை சொல்லவோ அநீதிக்கு மறுப்பு கூறவோ இயலாது ஆணவத்திற்கு தலைவணங்கி வஞ்சக நெஞ்சகத்திற்கு இதம்பேசி வாழ்வோர் பலர் இருப்பினும் புலியும் சிறுத்தையும் சிங்கமும் சிறுநரியும் ஓநாயும் வாழும் காட்டிலே மங்கையரும் போற்றும் மான் கூட்டமும் இருக்கத் தான் செய்கிறது என்பது போல உலகம் போற்றும் தமிழர் கூட்டத்திலேயும் உண்மை நேர்மை உலகம் அறிய கன்றுக் குட்டியின் உயிருக்காகப் பெற்ற மகன்மீது தேர் சக்கரத்தைத் தன்கையால் ஏற்றி மரணதண்டனை நிறைவேற்றிய மன்னன் குலோத்துங்க சோழன் பரம்பரையிலே உண்மை மறைந்து விடுமா? அப்படியொரு நேர்மையாளர் இதை விசாரித்துக் கிழவியை அடித்தது தவறு என்று அச்சுறுத்தி அபராதத் தொகையை வாங்கிக்கொடுத்து மீண்டும் கிராமத்தில் வேலை செய்யுமாறு பணித்து எதிரியை எச்சரித்து அனுப்பிய அவருக்கு நமது நன்றியைத் தெரிவிக்காமல் இருக்கமுடியாது அல்லவா ?

(தொடரும்)

❋

நூராண்டு வாழ்க்கை இரகசியம்

(முகில் வண்ணன்)

இயற்கையோடு வாழ்ந்த முன்னோர்கள் பல நலன்களால் சூழப்பட்டிருந்துங்கூட மனிதனில் மாறிலும் எத்தனை இயற்கையோடியைந்த சூழ்நிலையில் வாழ்ந்தாலும் மாலுமி இல்லாத மரக்கலம் பாறையில் மோதி உடைவதுபோல உடல் என்ற காய கப்பல் உடைந்து விடுமென நமது மூதாதையர் ஆயிரக்கணக்கான ஆண்டுகளாக கூறி வருகிறார்கள்.

திருநாவுக்கரசு அடிகள் கூறுவதைக் கேளுங்கள்.

கனியினும் கட்டிபட்ட கரும்பினும்
பனிமலர்க்குழற் பாவை நல்லாரினும்
தனிமுடி கவித்தாளும் அரசினும்
இனியன் தன்னடைந் தார்க்கிடை மருதனே.

சுவை மிகுந்த கனியும் கட்டிபட்ட கற்கண்டும் நாவில் ஊறி ஊறி நாவிற்கு மட்டும் இனிமையான சுவை தருகிறது. அழகிய மலரென கண்ணையும் கருத்தையும் கொள்ளைகொள்ளும் இனிய மகளிர் நாவிற்கன்றி உடல் முழுதும் இன்பந்தரும் என்பதை இயற்கையில் கண்டாலும் நம்மை ஆளும் வேந்தன் கல்லாளுயின் நாட்டில் எந்த இன்பமும் நிலவா. கல்லும் முள்ளும் சொரிந்த பாலையாய் நாடு காடாக காட்சியளிப்பது போல

மாதவர் நோன்பும் மடவார் கற்பும்
காவலன் காவல் இன்றெனின் இன்றும்

உலகம் எத்தனை சிறப்புடைய தாயினும் தலைமை யில்லாது வாழ முடியாது என்பதே மேலே கூறும் பொருள். மக்கள் அறிவும் ஆற்றலும் மிகுதியாயினும் அவர்களை ஆளும் அரசன் கல்லாதவனுயின் கெடும் என்று கூறுகிறார் கூல வாணிக சாத்தனர். அப்படியே உடலுக்கு அரசன் மனம் என்பதில் ஐயமில்லை அல்லவா? நாம் நமது உறுப்புகளை அத்தனையும் இரும்பாக்கி வைத்துக்கொண்டாலும் மனம் நம்மோடு ஒத்துழைக்காவிடில் பலன் கிடையாது என்பதை அறிகிறோம்.

அக்காலத்தில் கோப்பெருஞ் சோழன் தனது உயிர் நண்பர் பிசிராந்தையார் என்ற புலவர் பெருமானை கண்ட போது தன்னை அரசர்க்கு அறிமுகபடுத்தினர். அரசர் பிசிராந்தையாரை பார்த்து ஆச்சரியப்பட்டு களிப்புடன் கட்டித் தழுவி புலவர் பெரும உம்மை நெடுங்காலமாக

கேள்விப்பட்டு வருகிறேன். நாம் கேட்ட காலத்திற்கும் உம் உடல் வளம்குன்றிருக்கிறது; முகத்தில் இளமைதழுவுகிறது.

தலைமுடி தாடி மீசை முடிகளில் ஒன்றிலும் நரையை காணேம். முதுமைக்குரிய குறிகள் உமது உடலில் காணப் படவிலலை. சாவா மருந்து உண்டு வருகின்றீரா? அம்மருந்து யாது? இளமை குறையாதிருக்க காரணமென்ன? என்ற வினவிற்கு புலவர் கூறுவதை கேளுங்கள்.

யாண்டும் பலவாக நரையில ஆகுதல்
யாங்காகியரென வினவுதிர் ஆயின்
மாண்டஎன் மனைவியோடு மக்களும் நிரம்பினர்
யான் கண்டனையர் என்இளையரும் வேந்தனும்
அல்லவை செய்யான் காக்கும் அதன்தலை
ஆன்றவிந் தடங்கிய கொள்கைச் சான்றோர்
பலர்யான் வாழும் ஊரே.

ஆண்டுகள் பல கழியினும் நரையில்லையே என கேட்கின்றீர். எனது மனைவியும் மக்களும் எனது கருத்துக்கு மாறுபடாத குறிப்பறிந்து நடப்பவர்கள். எமது அரசன் நெறி முறை தவறாது நாட்டை ஆளும் நலத்தகையோன். கல்வி கேள்வி களில் சிறந்த நல்லோர் பலர் எனது நண்பர்கள். நன்னிலை சூழ்நிலையில் என்றும் யான் வாழ்ந்து வருவதால் இயற்கை யோடு ஒட்டி எனது மனநிலை பழக்கங்கள் இயங்கி வருவதால் நரை திரை அணுக காரணம் யாதுளது என்கிறார். அனுபவ வாயிலாக பார்த்தாலும் மனத்தின் ஒருமைப்பாடு உயிர்வாழ்க் கையில் மிகமிக அவசியமானது என்ற முடிவாகிறது.

மண், விண், காற்று, நீர், நெருப்பு இவ்வைந்தும் முதலாக வைத்து உலகம் இயங்குவது போல உடலும் இயங்குகிறது. அதை ஆட்சிபுரியும் தலைவனின் திறமையை பொருத்தே அதன் வளர்ச்சியுமாகும். உடலில் கோணல் எத்தனை இருப் பினும் கவலையில்லை. உள்ளத்தில் கோணல் வராமல் பாது காப்பதுதான் கவனத்திற்குரியது. இதற்கு சான்றாக தமிழ் மூதாட்டியார் கூறுவதையும் கேளுங்கள்.

நாடாக ஒன்றோ, காடாக ஒன்றோ
அவலாக ஒன்றோ மிசையாக ஒன்றோ
எவ்வழி நல்லர் ஆடவர்
அவ்வழி நல்ல வாழிய நிலனே

இயற்கை பூமி காடு மேடு பள்ளமாகவோ எப்படி இருப்பினும் எங்கு புகழ்மிக்க ஆடவர் உளரோ அங்கு நீயும் நல்ல நாடாக இருக்கிறாய் என்ற பொருளை காண்கிறோம். அத்தன்மை போலவே உடலென்ற தசை உருவம் எத்தன்மை யாயினும்

மனமென்ற காவலன் கடமை வழுவாதவனுயின் உடலும் ஒழுங்காய் வளரும் என்பதற்கு இன்னும் எத்தனை சான்று கள் வேண்டும். அள்ள அள்ள குறையாதது; என்றும் இள மையோடு இருப்பது உள்ளந்தான் என்பதில் நமக்கு சந்தே கம் வேண்டியதில்லை. இதுவரை இதை ஊன்றிப்படித்த வாசகர்கள் மனிதன் நீண்ட வாழ்க்கையின் இரகசியம் மனதை நம் வசப்படுத்தி நடந்துகொள்வதே என்ற முடிவை இதுவரை புரிந்துகொண்டோம். அந்த அருபெரும் மனம் என்ற உயிர் நண்பரை நாம் அறிவின் துணைகொண்டு அவரின் முழு அன்பையும் ஆதரவையும் எப்படி பெறுவது என்பதை இனி ஆராய்வோம்.

நூறுண்டு வாழவேண்டுமென்று எழுதியவரும் சொல்லிய வரும் இதுவரை வாழவில்லையே என நினைக்கலாம். வாழ்ந்து கொண்டிருப்பவர்கள் வாழ்ந்துகொண்டே இருக்கிறார்கள். வாழவேண்டும் என்று சொன்னவர்கள் எந்த காரணத்தினல் மறித்தார்கள் என்பதை ஆராய்ந்து அதை நீக்கப் பிரயத்த னப் படவேண்டும். சொன்னவர் தோல்விகண்டார் என் பதால் திட்டம் தோல்வி கண்டதாக அர்த்தமில்லை யென்பதை நினைக்கவேண்டும். (வளரும்)

★

சிதம்பரம் மருத்துவர் சங்கம்

திரு. V. S. முத்தையன் அவர்கள் தலைமையில் நடை பெற்ற தேர்தல் கூட்டத்தில், சின்ன காசியார் தெருவி லுள்ள மருத்துவர்கள் பொது மடத்தின் நிர்வாகங்களை நடத்திவர புதிய டிரஸ்டிகள் அடியிற் கண்டவர்கள் நியமனம் செய்யபட்டார்கள் டாக்டர் P. குஞ்சித பாதம் K. கோவிந்த சாமி, S. சாமிநாதன், G. கோதண்டபாணியுடன் A. சோம சுந்தரம் பொருட்காப்பாளராகவும் நியமிக்கப்பட்டனர் சென்ற இதழில் சு. சுவாமிநாத வைத்தியர் மனைவி என திருத்தி வாசித்துகொள்ளவும்.

தமிழ்க் கவிஞர்களுக்கு வேண்டுகோள்.

தமிழ்க்கவிஞர்கள் யாவரும் தாங்கள் இயற்றிய மிகச் சிறந்த கவிதைகளில் ஒன்றிரண்டையோ அத்துடன் நூல் களாக வன்றி தனிக் கவிதைகளாக இருந்தாலும் அனுப்புவ தோடு கவிதை எழுத தொடங்கிய காலம் எழுதியுள்ள கவி தைகள் குறிப்புகளையும் இணைத்து அடியிற்கண்ட முகவரிக்கு அனுப்ப வேண்டுகிறோம். செயலாளர்;

சென்னை கவிஞர் கழகம்,
1/27, பெருமாள் முதலி தெரு, தங்கசாலை, சென்னை-1.

கலித்தொகையில் நகைச்சுவை

எஸ். என். சொக்கலிங்கம், M. A.

இயற்கைப் பொருள்கள் பலவற்றின் திறங்களை ஆய்ந்து அறிந்து கூறுவதிலும், உணர்ச்சிகளை வெளிப் படுத்துவதிலும் சங்ககாலப் புலவர்கள் வல்லவர்கள். எட்டுத் தொகை நூல்களுள் ஒன்றாகிய கலித்தொகை, அகப் பொருளாகிய புலநெறி வழக்கையே பொருளாக உடையது. நூல் முழுதும் கலிப்பாவால் அமைந்துள்ளது. பாலை, குறிஞ்சி, மருதம், முல்லை, நெய்தல் என்னும் முறையில் தொகுக்கப்பட்டுள்ளது. இவற்றை முறையே பெருங்கடுங் கோன் கபிலர், மருதன் இளநாகனார், நல்லுருத்தின், நல்லந் துவனார் என்போர் இயற்றினர் என்பது ஒரு வெண்பாவால் தெரிகிறது. திரு. T. K. சிவராஜ பிள்ளை அவர்கள், "கலித்தொகை ஆசிரியர் ஒருவரே" என முடிவுகட்டினர். இதன் ஆசிரியர் ஒருவர் அல்லர் என வேறுசில அறிஞர்கள் கருதுகிறார்கள். கலித்தொகைச் செய்யுட்களை ஊன்றிப் படிக்கும்பொழுது, பல்வேறு புலவர்கள் இயற்றினர் என்ற கருத்தே பொருத்தமானதாகப் படுகின்றது.

இன்பம் பற்றிய எக்களிப்பு அல்லது மனவெழுச்சிக்குக் கலியின் துள்ளலோசை ஏற்றதாகலின் இதனையே ஆசிரி யர்கள் சிறந்ததெனக் கொண்டனர். தரவு, தாழிசை முதலிய கலியுறுப்புக்கள், ஒரு கருத்தை நகைச் சுவைபட நவிலு தற்கு ஏற்ற வெவ்வேறு ஓசையும், அமைப்பும் உடையன வாக விளங்குகின்றன. கலித்தொகைச் செய்யுட்களெல்லாம் சங்கு திரண்டு முரன்றெழும் ஓசை போலத் தழைந்து இன்பம் பயக்கும் ஓசை நலமுடையன. இவற்றில் பொதிந் துள்ள பொருள் வளமும், கருத்து மாண்பும் அளவிடற்கரிய சிறப்பினவாய்த் திகழ்கின்றன. எனவே, 'கற்றறிந்தோர் போற்றுங்' கலி என்று அடைகொடுத்துள்ளார்.

கலியில், நகைச் சுவை நிறைந்த சில பாக்கள் இருக் கின்றன. தலைவி கூறுகின்ற செய்தியை முதற்கண் நோக்கு வோம். ஒரு நாள் இரவில், தலைவனை எதிர் நோக்கி, வழி மேல் விழிவைத்துக் குறியிடத்தில் நின்றிருந்தாள் தலைவி. மபிரற்ற தலையும், கருங்குட்டத்தால் குறைந்த கையும் காலு முடைய முடமாகிய மூதிர்ந்த பார்ப்பான் அங்குச் சென்று, தலைவியை நோக்கி, "பெண்கள் நிற்கத் தகாத நள்ளிரவில்,

இங்கு வந்து நிற்கும் நீ யார்?" என்று கேட்டான். பின்பு; "சிறியவளே, நீ என்னிடம் அகப்பட்டாய்" என்று தொடர்ந் தான். வைக்கோலைக் கண்ட முதிய எருதுபோல் ஆசை யுடன் அருகே போய், "தையால், தம்பலம் தின்பாய் என்று தன் பையைக் குலைத்து எடுத்துக்கொள்" என்றான். தலை வியோ ஒன்றும் பேசாமல் சிலைபோல் நின்றாள். அவனுக்கு அச்சம் ஏற்பட்டது. பின்னர்க் கூர்ந்து நோக்கி 'நீ பெண் பாற் பசாசு; யான் ஆண்பாற் பசாசு; எனக்கு அருள் செய்" என்று கெஞ்சினான். ஒரு கையால் மணலை அள்ளி அவன்மீது விடாது தூவினாள் தலைவி. ஊரார் கேட்க அல றிக்கொண்டு ஓட்டம் பிடித்தான் அக்காமுகன். தலைவனைக் காணச் சென்ற இடத்தில், அக்காமுகன் இருந்த தன்மை-புலியைப் பிடிக்க வைத்த வலையில் குறுநரி சிக்கிய தன் மையை ஒத்தது என்று இந்நாடகத்தைத் தலைவி நகைச்சுவை படச் செப்புகிறாள்.

கூனிக்கும், குள்ளனுக்கும் இடையே காதல் தோன்றி, வளர்ந்துவிட்டது. கூனனுக்குத் தான் அழகன் என்ற நினைப்பு; கூனிக்கோ தான் அழகி என்ற எண்ணம் இவ் வாறு அழகற்றவர்கள் தம்மைக் கவினுடையவர்களாகக் கருதுவது உலகியற்கை ஒருவரை ஒருவர் கேலியாகப் பேசிக் கொள்ளுகிறார்கள். கூனியின் சாயலை எள்ளிப் பேசுகிறான் கூனன்.

"நீருள் நிழல்போல் நுடங்கிய மென்சாயல்
ஈங்குகுச் சுருங்கி
இயலுவாய் நின்னோடு சாவுவேன் நின்றீத்தை"

நீருள் தெரியும் நிழல் போல நெளிந்த சாயலோடு உருவம் குறுகிச் சுருங்கி நடக்கின்ற ஏ, கூனி, கொஞ்சம் நில், உன் னோடு ஒன்று பேசவேண்டும். நான் உன்னோடு பேசுவதற்கு என்ன புண்ணியம் செய்தனையோ என்ற கருத்தமைய மொழிந்தான். இதைக் கேட்ட கூனிக்கு ஒரே வியப்பாகி விட்டது. "பாவம், கூனன் தன் நிலையையும், மறந்துவிட் டான்போலும், இவனைப் பார்த்தால் வேடிக்கையாக இருக் கிறது; இவன் இருக்கிற இருப்புக்கு, என்னையே இழித்துப் பேசத் தொடங்கிவிட்டானே என்று நினைத்தாள். கோபம் வந்தது உடனே" ஏ, குள்ளா உனக்கு நான் மட்டமா என்று சொல்லிப் பீடுடன் நடக்கலானாள். குள்ளனும் மெள்ளப் பின் தொடர்ந்தான். இவன் நடந்து வருதைப் பார்த்த கூனிக் குச் சிரிப்புத் தாங்க முடியவில்லை; அவள் சொல்லுகிறாள்.

"யாமை எடுத்து நிறுத்தற்றால் தோளிரண்டும் வீசி
யாம் வேண்டேமென்று விலக்கவும் எம் வீழும்
காமர் நடக்கும் நடைகாண்"

ஆமைக்குக் கையும், காலும் முளைத்தது போல இருக்கிற ஆள் நீ; ஆமையை எடுத்து நிற்க வைத்தால், உன்னைப் போலத்தான் இருக்கும்; அதில் எனக்கு ஐயமில்லை. உன் குட்டைக் கைகளையும், குட்டைக் கால்களையும் வீசிக்கொண்டு என்னைத் தொடர்கிறாயே; நானே உன்னை விரும்பவில்லை; நீ எதற்காக மன்மத நடைபோட்டு என்பின் வருகிறாய், வெட்கமில்லையா என்ற கருத்துப்படச் சொல்லுகிறாள். இதைக் கேட்ட கூனனுக்கு ஒரே ஆனந்தமாக இருந்தது. கூனியைப் பார்த்து, 'ஏ, குள்ளி, உன் விருப்பம் தெரிந்து விட்டது. காமனார் நடையை இதோ பார், என்று கைகளைத் தன் விலாவுக்குள் வீசிவீசிச் சிறிது நடந்து காட்டினான். இவ்வாறாக அப்பாட்டின் பொருள் வளர்கின்றது.

கடன் வாங்குவது ஒரு கலை; சிலர் அதில் தேர்ச்சி பெற்றவர்கள். கடன் வாங்கும்போது பல்லைக் காட்டியும், பக்குவமாகப் பேசியும், உறுதியாகக் கொடுப்பதாக ஆணையிட்டும், வாங்குவர். கையில் பணத்தை வாங்கும் போது, முகத்தில் மகிழ்ச்சி தெரியும். அதைத் திருப்பிக் கொடுக்க மனம் வராது. கொடுக்காமல் ஏமாற்றினால் நன்றாக இருக்குமே என்ற எண்ணமும் எழும். கொடுத்தவன் மறந்துவிட்டால் நன்றாக இருக்குமே என்ற நினைப்பும் தோன்றும். கடன் கொடுத்தவன் திரும்பக் கேட்கும்பொழுது திருப்பித் தருவதற்கு எரிச்சலாக இருக்கும் ஏதோ அவனுக்குச் சும்மா கொடுப்பது போன்ற உணர்வு எழும், முகம் சுளித்துக்கொண்டு கொடுத்து அழவேண்டுமே என்ற நினைப்புடன் கடனைத் ஒப்பிக் கொடுப்பார்கள். இந்நூலில் வரும் சில அடிகளை நோக்குவோம்.

"உண்கடன் வழிமொழிந் திரக்குங்கால் முகனும்தாங்
கொண்டது கொடுக்குங்கால் முகனும் வேறாகுதல்
பண்டுமிவ் வுலகத் தியற்கையஃ தின்றும் புதுவதன்றே."

ஏறத்தாழ இரண்டாயிரம் ஆண்டுகட்கு முன்பு வாழ்ந்த புலவர்," இந்த வழக்கம் பண்டும் இவ்வாறு இருந்தது; இன்றும் இவ்வாறு இருக்கிறது என்கிறார். உலகியலை அறிந்த நாம் இந்தக் கவிதையைப் படிக்கும்பொழுது 'இன்றும் நிலைமை மாறவில்லை, அப்படியேதான் இருக்கிறது' என்று சொல்லத் தோன்றுகிறதல்லவா?

✹

இலங்கை இந்திய மருத்துவர் சங்கம்

38-வது ஆண்டுவிழா

கொழும்பு லேயாட்ஸ் பிராட்வே வீதியிலுள்ள நாராயண குரு மண்டபத்தில் தலைவர் சு. குப்புசாமி அவர்கள் தலைமையில் இ. இ. மருத்துவர் சங்க 38-வது ஆண்டு விழா நடைபெற்றது. இவ் விழாவிற்கு மருத்துவர் குல எழுத்தாளர்களும் சிறப்பு பெற்றவர்களும் பரிசு பெற்றவர்களுமான கவி: திரு. அ. சிதம்பரநாத பாவலர் சிறுகதை ஆசிரியர் டொமினிக்ஜீவா உதவி இந்திய பிரதிநிதி (ஹை கமிஷனர்) திரு. பி. ஆர். எஸ். மணி, ஏ. அஸீஸ். கே. ஜீ. எஸ். நாயர் டீ. எம். பீர்முகமது, எம். பி. பாரதி, எ. எஸ். ராஜா, எஸ். சங்கரலிங்கம் போன்ற பிரமுகர்கள் வந்து கூட்டத்தை பெருமைபடுத்தி இருந்தனர். தமிழர் பிரதிநிதியான உதவி ஹைகமிஷனர். பி. ஆர். எஸ். மணி அவர்கள் தமிழ் வளர்க்கும் அறிஞர்களான அ. சிதம்பரநாத பாவலர் டொமினிக் ஜீவா அவர்களுக்கு சங்க சார்பில் பொன்னாடை போற்றி மகிழ்ந்தார் மேலே கண்ட பிரமுகர்கள் அனைவரும் 38 ஆண்டுகள் இடைவிடாது சமூகபணி செய்துவரும் மருத்துவர் சங்க சேவையை பாராட்டி பேசினர். எழுத்தாளர் இருவரும் இன உணர்ச்சிபொங்க நன்றி கூறினர். மேலும் அடியிற் கண்ட தீர்மானத்தை அமுல் செய்யவேண்டுமென இலங்கை சர்க்காரை கேட்டுக்கொண்டனர்.

தீர்மானங்கள்

கொழும்பு சிங்ஸிலி தியேட்டருக்கு முன்னால் அம்பட்ட தெரு என்ற பெயரை ஒல்கொட வீதி என்று மாற்றுவதாக சென்று ஆண்டு தீர்மானம் செய்த முனிசிபல் இதுவரை மாற்றாமல் இருப்பதற்கு இக்கூட்டம் வருந்துவதன்றி உடனடியாக மாற்றியமைக்குமாறு கேட்டுக்கொள்கிறது.

இலங்கையில் சலூன் தொழில் நடத்தும் மருத்துவர்கள் பதிவு கட்டணம் ரூபாய் 1000. வாச கால பெர்மிட் கட்டணம்

ரூபாய் 400 கட்டவேண்டும் என்ற நிபந்தனை எங்கள் வாழ்க்கையை அடியோடு பாதிக்கிறது. எனவே இவ் விருவரிகளிலும் இருந்து எங்களுக்கு விதிவிலக்கு அளிக்க வேண்டுகிறோம். புது ஆண்டுக்கு அடியிற்கண்ட நிர்வாகிகள் நியமனம் செய்யப்பட்டனர். திரு. சு. குப்புசாமி தலைவர், க. சங்கரலிங்கம், துணைத்தலைவர், என். பி. நாயகம் பொருளாளர், அ. பட்டையா, ச. வேம்பு இணைச் செயலாளர்கள், (வாழ்த்துகள் தந்திகள் படிக்கப்பட்டு செயலாளர் நன்றிகூற கூட்டம் பொங்கல் வாழ்த்தொலியுடன் இனிது முடிவடைந்தது.

இலங்கை இந்திய மருத்துவர் சங்கத்தின் 38 வது ஆண்டு விழாவில் சங்கத் தலைவர் திரு. சு. குப்புசாமி அவர்கள் நிகழ்த்திய

தலைமையுரை

வாழ்க மருத்துவர் சமூதாயமே! யென் உள்ளம் உங்களுக்காக துடிக்கிறது, யென் அன்பு உங்களை அழைக்கிறது, யென் ஆர்வம் உங்கள் நன்மையை அவாவுகின்றது.

இந்த அக்கப்போர்களெல்லாம் மனிதனிடம் மனப்புதரில் ஒளிந்த பேய்களால் வருவன. அந்தக்கரண சுத்தியோடு இல்லை. உள்ளன்பில்லை. சுயநல நரியும் அகம்பாவப் புலியும், பொறுமைப் பாம்பும் மனப்புதரிலிருந்து சீறி சினந்து நஞ்சு கக்கி இடர் செய்கின்ற நேரத்திலே, பொங்கல் நாளிலே, அன்பு வளர்ந்து அறம் ஓங்கி இன்பம் தழைக்க வாழ்த்துகிறேன்.

பொங்கல் தினத்திலே பொன்னை போர்த்தும் விழாவிலே இங்கு சமூக மளித்திருக்கும் இந்திய உதவி தூதுவர் அவர்களே! வருக! தனிப்பெருந் தலைவர் அஸீஸ் அவர்களே வருக! இந்திய தூதுவர் முதல் காரியதரிசி அவர்களே வருக! கவிஞர் சிதம்பரநாத பாவலர் அவர்களே வருக! ஜீவா அவர்களே வருக! எங்கள் அழைப்பின் பேரில் சொற்பொழிவாற்ற சமூக மளித்திருக்கும் பெரியோர்களே வருக! அன்பர்களே வருக. சங்கத்தார் அனைவருக்கும் நன்றிகலந்த வணக்கத்தை தெரிவித்துக் கொள்கிறேன்.

பேரன்பு மிக்க பெரியோர்களே! சகோதரர்களே! இலங்கை இந்திய மருத்துவர் சங்கத்தின் 38 வது ஆண்டு

பூர்த்தியாகிவிட்டது. திடமான வயதடைந்த போதிலும் கொடிய நோயால் பீடிக்கப்பட்டவனைப் போன்று சதாவும் வைத்திய சிகிச்சையிலே காலம் கடக்கின்றன.

இந்த சங்கம் தொழிலுக்கு யேர்ப்பட்ட இன்னல்களை களையவும் தொழிலாளி முதலாளி யென்ற பாகுபாடின்றி பல பணிகள் புரிந்து இருக்கின்றன. வாசகால சம்பந்தமாய் கோட்டா விதிப்படி குடியேற்ற வெளியேற்ற இலாகாவுடன் வாதாடியும் தூதுவர் காரியாலய மூலமாயும் வாதாடியும் சில பேர்களுக்கு வாசகாலத்தை நீடித்து கொடுக்கப்பட்டிருக்கின்றன. பல அன்பர்களுக்கு வாசகாலத்தை நீடிக்க கோரி விண்ணப்பித்து பல மாதங்களாகியும் இன்னும் பதில் கிடைக்கவில்லை. மேலும் பதில் கொடுக்கப்படாமலே அவர்கள் பேரில் நடவடிக்கைகள் யெடுக்கப்பட்டிருக்கின்றன. 1960 வருடம் செப்டம்பர் 15-ந் தேதி முதல் அமுலுக்கு கொண்டு வரப்பட்ட விஸாவரி வருடத்திற்கு ரூபாய் 400 வரியாக செலுத்தவேண்டும் என்றுதான் சட்டம் கூறுகிறது ஆனல் இலாகா அதிகாரிகள் ரூ. 400—800—1200—வரியாக வசூலித்துக்கொண்டு 8, 10 நாள் 1, 2 மாதங்கள்கூட நீடித்து கொடுத்துவிட்டு மனு அறிவித்தல் இல்லாமலே கைது செய்து விடுகின்றார்கள் இவைகளை நாமும் ஸ்தானிகர் காரியாலய மூலமாயும் வாதாடி வருகிறோம் அவர்களும் நியாயத்தை கண்டு ஒத்துழைப்பு அளிக்கின்றார்கள். இனியும் அவர்களின் பூரண ஆதரவு தருவார்கள் யென நம்புகிறேன். தொழில் பதிவு கட்டண வரி ரூபாய் 1000 கட்டும்படி எச்சரிக்கை நோட்டீஸ்கள் வந்து கொண்டிருக்கின்றன. சலூன் தொழில் செய்பவர்கள் விசாவரி பதிவு வரிகள் செலுத்த முடியாதபடி பல நஷ்டங்களுக்கு ஆளாகின்றனர் வரி வகைகளிலும் கூட இலங்கை அரசாங்கம் இலங்கையர் வெளி நாட்டார் யென்ற பாகுபாடுகள் காண்பித்து அவர்களை நசுக்கி வெளியேறச் செய்வதை விடுத்து மனிதர்கள் யாவரும் சமம். இந்த நாட்டின் வளர்ச்சிக்கும் சமூக வளர்ச்சிக்கும் பாடுபட்ட இந்தியர்களுக்கு மனிதாபிமானத்துடன் கருமம் மாற்றும்படி இலங்கை அரசாங்கத்தை வேண்டிக் கொள்கிறேன்.

வணக்கம்.

த. ம. ம. சங்க கிளை மதுராந்தகம்

மருத்துவர் சங்கம

மதுராந்தகம் நவம்பர் 12ல காங்கிரஸ் கமிட்டி அலுவல கலத்தில் சங்கத் தலைவர் R. கோவிந்தன் அவர்கள் தலைமை யில் பொதுக்கூட்டம் நடைபெற்றது. அவ்வமயம் மண்டல காங்கிரஸ் கமிட்டி தலைவர் திரு. K. மன்னர்சாமி, திரு. எத்தி ராஜ், திரு. ராமானுஜம், திரு. A. வரதராஜன், திரு. K. V. கணணப்பா முதலிய பிரமுகர்கள் கலந்துகொண்டு மருத்துவ சமூக வளர்ச்சியில் பிரிந்து வாழாமல் ஒன்று பட்டு வாழ சங்கம் வேலைசெய்ய வேண்டும் என்றும் சங்க வளர்ச்சியை பாதுகாக்க வேண்டும் என்ற கருத்துபட பல விளக்கங்களை தந்து பேசி கூட்டத்தை சிறப்பித்தனர்.

அதன்பின் அடியிற்கண்ட தீர்மானங்கள் நிறைவேறின.

அரசாங்கம் நம் மூடி திருத்தும் தொழிலுக்கு இலவசமாகவோ கடனுகவோ தரும் மானியங்களை கூட்டுறவு முறையில் பெற்று தொழில் வளர்ச்சிக்கு பாடுபடுவ தென்றும். நமது தொழிலை சிறு கைத்தொழில் பட்டியலில் சேர்த்து மூவாயிர முதல் ஐந்தாயிரம் வரை கடனுதவி யளிக்க வேண்டுமென சர்க்காரைக் கேட்டுகொள்வதோடு தற்போது அளிக்க முன் வந்துள்ள 53 ரூபாய் எந்த காரியத்தையும் செய்ய முடியாது யென்றும் சர்க்கார் கவனத்திற்கு கொண்டு வருகிறோம் என தீர்மானிக்கப்பட்டு, தேசிய தொண்டர் மருத்துவர் S. S. விஸ்வநாத தாஸ் சுதந்திர வேட்கையை பாராட்டி ஒரு பாராட்டு மாநாடும் அவரை அடியோடு மறந்த காங்கிரஸ் ஸ்தாபனத்திற்கு ஒரு கண்டனத் தீர்மானமும் அனுப்புவதென தீர்மானிக்கப்பட்டது.

செயலாளர்:

மருத்துவர் சங்கம், மதுராந்தகம்.

* * * * *

இராமநாதபுரம் மருத்துவர் சங்கம்

இராமநாதபுரம் தாலுகா மருத்துவர்களின் கிளைச் சங்கக் கூட்டம் சென்ற 16-12-1961ல யன்று பகல் ஒரு மணிக்கு பாம்பனில் ரெஸ்ட் ஹவுஸ் கட்டிடத்தில் தாலுகா சங்கத் தலைவர் திரு. ஆ. சேவுகன் அவர்கள் தலைமையில் நடைபெற்றது. மேடி கூட்டத்தில் கீழ்க்கண்ட தீர்மானங்களை தாலுகா சங்கப் பொதுக்காரியதரிசி மு. முத்துக் கருப்பன் அவர்கள் பிரேரணை செய்ய ஏகமனதாக நிறை வேற்றப்பட்டது.

தீர்மானங்களாவன :

(1) கிராமங்களில் சவரத்தொழில் செய்யும் மருத்துவர் சுகாதார முறைப்படித் தொழில்செய்யக் கிராமப் பொது இ சர்க்கார் அபிவிருத்தித் திட்டத்தின் கீழ் சலூன் கட்டிக் தொழிலுக்கான சாமான்கள் வாங்கிக் கொடுத்து உதவிபுரிய கலெக்டர் அவர்களைக் கேட்டுக் கொள்வது.

(2) கிராமங்களில் தொழில் செய்யும் வீடில்லாத ம களுக்கு வீடுகட்டிக்கொள்ள சர்க்காரின் தரிசு நிலங்களைச் சா கொடுக்குமாறு சர்க்காரை கேட்டுக்கொள்வது.

(3) இராமநாதபுரம் தாலுகா இராமேஸ்வரத்திலி மருத்துவர்களுக்குப் பாத்தியமான கொண்டேஸ்வரமடம் நிர்வ காகவும், தர்மகாரியத்திற்காகவும் திருவாடனைத் தாலுகா 'ஆலிகுடி' என்னும் கிராமத்தை மானியமாகக் கொடுக்கப்பட கிராமத்தின் வருமானம் யாவும் மடத்திற்கு கொடுக்கப்பட்டுவ சில வருட காலமாக ஜமீன் ஒழிப்புத் திட்டத்தின் கீழ் சர்க்கார் விட்டபடியால் அதை நடவடிக்கை செய்து ஷி மானியத்தை மீண்டும் கிடைக்க ஏற்பாடு செய்யப்பட்டது.

(4) வருகிற பொதுத் தேர்தலில் நமது தாலுகா சங்கமும் சங்கங்களும் காங்கிரசுக்குப் பூரண ஒத்துழைப்பு அளித்துத் வாக்குகளையும் காங்கிரஸ் சார்பில் நிறுத்தப்பட்டிருக்கும் திரு. ச ராஜேஸ்வர சேதுபதி அவர்களுக்கே நம் வாக்குகளை கொடுப்பதெ முடிவு செய்யப்பட்டது.

(5) 28-12-1961 வியன்று இராமேசுவரம் விஜயம் செய்திருந் திரு. R. சண்முக ராஜேஸ்வர சேதுபதி மகாராஜா அவர்களுச் கொண்டேஸ்வர மடத்தின் முன்பாக ஷி மடத்தின் தர்மகர்த்தா சார்பில் திரு. S. ராமசாமி அவர்களும் இராமேசுவரம் மருத சங்கத்தின் சார்பில் திரு. S. முத்து ஷி சங்கத்தின் பொதுக்காரிய திரு. மு. முத்துக்கருப்பன் அவர்களும் வரவேற்பளித்தனர். அ மாலை நடந்த பொதுக்கூட்டத்திலும் மலர்மாலைகள் அணிவித்து வர பளிக்கப்பட்டது. இந்த மடமானது கனம் (ராமநாதபுரம்) திரு. திரு சேதுபதி அவர்களால் ஒரு பெரிய கட்டிடமும் அதற்கென நிர்வ திற்கு ஆலிகுடி கிராமம் ஒன்றும் சுமார் 200 ஆண்டுகளுக்கு கொடுக்கப்பட்டது. அது சம்பந்தமாக சில விஷயங்களை மேலும் ர முறையில் நடைபெற தாம் பூரண ஒத்துழைப்பு செய்வதாக மகார அவர்கள் வாக்களித்து வரவேற்புக்கு மிகவும் மகிழ்ச்சிதெரிவித்தார் இது சம்பந்தமான் சில விஷயங்களை ஷி மடத்தின் தர்மகர்த்தா S. ராமசாமி பண்டிதர் மகாராஜாவிடம் கூறினார் மகாராஜா அவர்க ஆவன செய்வதாக வாக்களித்தார்கள்.

★



தமிழ்நாட்டில் தமிழர்கள் கலைகளிலே பல அற்புதங்களை அமைத்திருப்பதை பார்க்கிறோம். அவைகளிலே கல்லும் இசைபாடுகின்ற மதுரை மீனாட்சி அம்மன் ஆலயமும் கலை நுணுக்கமும் வானசாஸ்திர விதியையும் கணித்து வானத்தை அளவெடுக்கும் தஞ்சை இராஜராஜன் கோபுரமும் திரிபுரமெரித்த நட்ராஜப் பெருமானின் நடனக் கலையின் சிறப்பான ஒற்றைக் காலைத் தூக்கி ஆடி நடனக்கலையை வானுர உயர்த்திய வடிவங்களை சித்தரிக்கும் தில்லை சிதம்பரத்தின் தெய்வீக ஆலயமும் மலையைக் குடைந்து கலையை உயர்த்திய மாமல்லபுரமும் பல்லவர் புகழும் தமிழ் நாட்டின் விலைமதிக்க முடியாத கலைபொருள்கள் அல்லவா? பண்டைய பெருமைக்கு பங்கம் தராது. மக்கள் மனதிற் கிசைந்த மர சித்திர வேலைகளை சிறந்த சிற்பிகளைக் கொண்டு செய்யப் படும் கலா நிலையமே. **P. வேதகிரி பர்னீச்சர் மார்ட்**

மக்கள் முகத்தை புத்தம் புதிய மலராக்கும் ஒப்பனையாளர்களே. உங்கள் தொழிற்கூடங்கள் கண்ணையும் கருத்தையும் கவரும் சிறப்பு வாய்ந்த சிற்பக் கூடமாக வேண்டுமானால் இங்கே வாருங்கள்.

சலூன் நாற்காலிகள் மேஜைகள் சித்திர வேலைப்பாடமைந்த வாசற்படிகள் சோபா செட்டுகள் கட்டில் படுக்கையறை செட்டுகள் சிறந்த முறையில் செய்து தரப்படும்.

குறிப்பு—வெளியூர்களிலிருந்து வரும் ஆர்டர்களை வரிசைப்படி செய்து அனுப்புவதால் தாமதத்திற்கு மன்னிக்கவும்.

P. வேதகிரி நியூ பர்னீச்சர் மார்ட்

மான் மார்க்கு சலூன் நாற்காலி உற்பத்தியாளர்,

136, வெங்கிடாசல முதலி தெரு, பீர்சாகிப்பேட்டை, சென்னை-14.

சென்னை. திருப்பள்ளி வீதி, ரத்தினம் (கிளை) அச்சகத்தில் V. திருநாவுக்கரசால் அச்சிடப்பட்டது. ஆசிரியரும், வெளியிடுபவரும் M. A. இராமகிருஷ்ணன், 5/81 பிராட்வே, சென்னை.